விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 30 ஸபர் 21 இதழ் 274
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-11-84

## மானிப்பாய், வவனியா இடைத்தேர்தல்

### நியமனப்பத்திரம் 30ல் தாக்கல்

(ஏ. வி. மாணிக்கம்)

மானிப்பாய், வவனியா தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள் விரைவில் நடைபெறுமெனத் தெரியவருகிறது.

இரு தொகுதிகளுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 30ம் திகதிக்குள் அவ்வப் பகுதி தேர்தல் அலுவலகங்களில் தாக்கல்செய்யப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியிலுள்ள 14 தேர்தல் தொகுதிகளிலும் பிரதிநிதிகளாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர், அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து சத்தியப்பிரமாணம் செய்யாததைத் தொடர்ந்து தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்திருப்பது தெரிந்ததே. (மா)

## ஆசிரியர்களுக்கு காசோலை!

(கல்வியங்காடு)

யாழ். கல்வி மாவட்ட ஆசிரியர்கள் அனைவரும் இம்மாதச் சம்பளத்தை தனித்தனிக் காசோலையாகப்பெறுவார்கள்.

யாழ். கல்விக் கந்தோரின் கீழ்உள்ள பாடசாலைகளில்

(5-ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

★ அரச ஊழியருக்கு ரூ 100 சம்பளஉயர்வு

★ சாராயம், சிகரட் விலை உயர்வு

★ சீனி, ரின்பால் விலை குறையும்

★ வருமானவரி எல்லை ரூ. 24,000ஆக அதிகரிப்பு

★ ஹோட்டல்களுக்கும் விற்பனவு வரி

★ தர்மப்பணமும் அதிகரிக்கும்

# சாதாரண மக்களுக்கு புதிதாக பளு எதுவும் சுமத்தாத பட்ஜட்!

## "இன ஒற்றுமையுடன் கூடிய ஸ்திரத்தன்மை வேண்டும்"

### அமைச்சர் 'றொனி' கருத்து

(பாராளுமன்றத்திலிருந்து இ. கந்தசாமி)

சாதாரண மக்கள் மீது புதிதாக பளு எதுவும் சுமத்தாத தனது வரவு-செலவுத்திட்ட யோசனைகளை நிதி அமைச்சர் திரு. றொனி டி. மெல் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட ஐ. தே. க. அரசின் எட்டாவது வரவு-செலவுத்திட்டத்தில் வழக்கம்போலவே சிகரெட், சாராயம் என்பன விலை உயர்த்தப்பட்டுள்ளன. அரச ஊழியருக்கு அடுத்த ஜனவரியிலிருந்து ரூபா 100 சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது

### பாராளுமன்றம் கூடியபோது

பாராளுமன்றம் நேற்றுக் கூடியபோது பிற்பகல் 2-10-க்கு நிதி அமைச்சர் வரவு-செலவுத்திட்ட யோசனைகள் அடங்கிய பெட்டியுடன் சபைக்கு வந்தார். 2-12-க்கு அவர் உரையாற்றத் தொடங்கியபோது பிரதமர் உட்படப் பல சிரேஷ்ட அமைச்சர்களைச் சபையில் காணவில்லை.

### அடிப்படைப் பிரச்னைகள் இரண்டு

நமது நாட்டின் இரண்டு அடிப்படைப் பிரச்னைகளுக்கு மன உறுதியோடு தீர்க்கமான முடிவுகாணவேண்டும் என்று தனது உரையில் அமைச்சர் குறிப்பிட்டார்.

''இன ஒற்றுமை, சமாதானம் என்பவற்றோடு கூடிய அரசியல் ஸ்தரத்தன்மையை மீண்டும் பெறவேண்டும் வறுமையை விரட்டவேண்டும்'' என்றார் அவர்.

''பல நூற்றாண்டுகளாக அருகருகே வாழ்ந்து வந்துள்ள, அடிப்படையில் நற்குணமும் நல்லெண்ணமும் கொண்ட சிங்களமக்களும் தமிழ்மக்களும் சேர்ந்து நியாயபூர்வமான, என்றுமேநீடிககத்தக்க தீர்வுஒன்றை காண்பது என்பது முடியாதகாரியமல்ல.'' என்றும் அமைச்சர் கூறினார்

அமைச்சர் தெரிவித்த வரவுசெலவுத்திட்ட யோசனைகள் விபரம்வருமாறு:-

### தனிப்பட்டவர் வருமானவரி எல்லை

தனிப்பட்டவர்கள் மீதான வருமானவரி எல்லை 18 ஆயிரம் ரூபாவிலிருந்து 24 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப் ட்டுள்ளது

1985-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து வருடம் ஒன்றிற்கு 24 ஆயிரம் ரூபாவிற்குக் கூடிய வருமானம் பெறுபவர்களே இனி வரி செலுத்தவேண்டும்.

### அரச ஊழியருக்கு ரூபா 100

அடுத்த ஜனவரி முதல் சகல அரசஊழியர்களுக்கும்வாழ்க்கைச் செலவுப்படி மேலும் நூறு ரூபாவல் அதிகரிக்கப்படும். இதனுல் சகல அரச ஊழியர்களும் 100 ரூபா சம்பள உயர்வுபெறுவர்

தர்மப்பணமும் அதிகரிக்கப்படும்.

### சிகரெட் 5 சதத்தால் உயரும்

புகையிலைக்கான வரி கிலோவுக்கு 341 ரூபாவிலிருந்து 371 ரூபாவாக உயர்த்தப்படும். இதனுல் சகல சிகரட்டுகளும் 5 சதத்தால் விலை உயர்த்தப்படும்.

### சாராய விலை அதிகரிப்பு

தென்னஞ் சாராய காலால் தீர்வை லீற்றர் ஒன்றுக்கு 53 ரூபாவிலிருந்து 61 ரூபாவாக உயர்த்தப்படும். போத்தல் ஒன்று 5ரூபாவால் உயரும்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெளிநாட்டுக் குடிவகைகள் 65 ரூபாவிலிருந்து 73 ரூபாவாக உயர்த்தப்படும்.

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்றும் பதற்றம் கைதான இளைஞர் சிலரை காணவில்லை!

### அரசஅதிபரிடம் பெற்றோர் புகார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஆயுதப் படையினரின் சோதனையின் போது கைது சய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்களில் மூவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்தநிலையில் காணப்பட்டனர். இந்த மூவரின் சடலங்களும் தற்போது வவனியா ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதாகதெரிய வந்துள்ளது

நேற்றுமுன்தினம் வவனியாவில் இடம்பெற்ற இராணுவ சோதனையின்போது பல இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இராணுவ

[5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## உதவி அரசாங்க அதிபர் விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு. வி சிங்காரவேலு மோட்டார் விபத்தொன்றில் காலமானர்

மாநாடு ஒன்றில் கலந்து காள்வதற்காக கொழும்பு சல்வதற்கு இன்ரசிற்றி ரயில் ஏறுவதற்காக வவனியா

(5ம் பக்கம் 4ம்கலம் பார்க்க)

## தமிழ்நாடு சட்டசபை கலைக்கப்படும்!

[சென்னை]

தமிழ்நாடு சட்டசபையைக் கலைக்கும் தீர்மானம் நேற்று நடைபெற்ற தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டம் நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது

தமிழ்நாடு சட்டசபையைக் கலைக்கும் தீர்மானத்தை உடனடியாகவே ஆளுனர் எஸ். எல். குரானவிடம் திரு. நெடுஞ்செழியன் கையளித்தார்

## பொலிஸ் விடுதிக்கு அருகில் குண்டுவெடிப்பு!

### பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள பொலிஸ் விடுதிக்கு அருகில் நேற்று அதிகாலை பலத்த சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, விடுதியிலிருந்த பொலிஸார் சுமார் அரைமணி நேரம் துப்பாக்கிப் பிரயேகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

நேற்று அதிகாலை 5-30மணியளவில் ஒரு குண்டு வெடித்ததைத் தொடர்ந்து பொலிசார் அப்பகுதியில் மற்றொரு குண்டு கண்டெடுத்தனர். இச்சம்பவத்தின்போது எவருக்கும்காயம் ஏற்படவில்லை.

வெடிக்காத நிலையில் கண்டெடுக்கப்பட்ட குண்டு நேற்று நண்பகல் வெடித்துச் செயலிழக்கச் செய்யப்பட்டது. (க,)

# "'ரியூசன்' நோயால் சுயசிந்தனைக்கு ஆபத்து!"

## வேம்படி பரிசளிப்பு விழாவில் வைத்தியஅத்தியட்சகர் நச்சினார்க்கினியர்

[யாழ்ப்பாணம்]

''மாணவ சமுதாயத்தை இன்று ஆட்டிப்படைக்கும் கொடிய நோய் 'ரியூசன்' என்னும் பயங்கர நோய். இந்த நோயினால் ஒவ்வொரு மாணவரும் சுயமாகச் சிந்தித்து, கல்வியில் பூரண பயனை அடையமுடியாது தவிக்கின்றனர். பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் புகும்வரை 'ரியூசன்' கல்வி புரையோடிப்போய் மாணவர் சமுதாயத்துக்கு அச்சுறுத்தலாகவளர்ச்சியடைந்துவருகின்றன. எனது காலத்தில் 'ரியூசன்' கிடையாது. பல்கலைக் கழகக் கல்விக்கும் 'ரியூசன்' கிடையாது. பல்கலைக்கழகம் செல்பவர்கள் இன்று, இந்நோயால் பாதிப்புற்று சுயமாக சிந்தித்து கல்வியை வளம்படுத்த முடியாது தடுமாறுவதை என்னால் அங்கு காணமுடிகிறது. மாணவர்கள் ஒருவேளை 'ரியூசன்' கல்வி மூலம் ஒரு பரீட்சைக்கு தயார் நிலைக்கு தன்னை உருவாக்கிக்கொள்ளலாமே யொழிய கல்வியை வளம் படுத்தமுடியாது.''

இவ்வாறு யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் திரு. எம். நச்சினார்க்கினியர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி அதிபர் திருமதி ஏ. இராஜரத்தினம் தலைமை தாங்கினார். முழு நிகழ்ச்சிகளும் ஆங்கிலத்திலே நடைபெற்றதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரதம விருந்தினர், மேற்கத்தியநாகரிகத்தில் உடையணிந்திருந்தும் கன்னித் தமிழில் நீண்ட நேரம் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,'' யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி 140 வருடங்கள்பழமையானது என்பதை அறிந்து பெருமையடைகின்றேன். இன்று நடைபெறும் பரிசளிப்பு விழாவில், பரிசைப்பெறுபவர்கள் திறமைசாலிகள் என்றும் மற்றைய மாணவிகள் திறமையற்றவர்கள் என்றும் எண்ணிவிடக் கூடாது. திறமையென்பது தான்பெற்ற கல்வியால், தனக்கும் தான் சார்ந்த சமூகமும் பூரண பலனைப்பெறும்போதே திறமைகிடைக்கிறது. சுபிட்சமான சமூகத்தை நாம் கட்டியெழுப்பவேண்டுமானால் அதற்குக் கல்வி இன்றியமையாதது. இக்கல்வியை இளமைப்பருவத்திலேயே கல்லூரிகளில்தான் பெறமுடியும். கல்விக்கூடங்கள் ஆலயங்களுக்குச் சமமானவை. இங்கேதான் கல்விச் செல்வத்தைப்பெறமுடியும். நமக்குக் கல்வி கற்பிக்கும் ஆசான்களே எங்களை வழிநடத்தும் மகான்கள்.

''இன்று உலகிலே பெரிய அதிசயங்கள் இடம்பெறுகின்றன. அவைகள் பாரிய கண்டுபிடிப்புகளாக, அதிசயங்களாக, மாபெரும் முன்னேற்றங்களாக கூறப்படுகின்றன. மனிதன் சந்திரமண்டலத்தில் காலடிவைக்கலாம், பாரிய ஏவுகணைகளால் கண்டம்விட்டுக் கண்டம் தாக்கலாம். செயற்கைக் கோள் மூலம் தகவல்களைப்பெறலாம். இவையெல்லாம் முன்னேற்றமாகக் கருதமுடியாது. இவை மனிதகுலத்தின் அழிவாகவும் மாறலாம்.

''தன்சானியாவில் கொடிய பஞ்சத்தினால் பலர் சாகிறார்கள். எஸ்கிமோவர்கள் கடும் குளிரினால்இறக்கிறார்கள். இவர்களைப் பாதுகாக்க விஞ்ஞானம் மேம்படுமானால் இதுமுன்னேற்றம்தான். மனிதகுல மேம்பாட்டிற்கு கல்வி உதவவேண்டும். அதற்காகஎமதுகல்வியை மேம்படுத்துவதனால்கோடானு கோடி மனித உயிர்களைக் சாப்பாற்றலாம். அதற்காகவே கல்வி இங்கு வளர்க்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் இப் பாடசாலை புலமைப் பரிசில் பெறும்பாடசாலையாகஉள்ளது என பெருமைப்பட்டார். இப் பாடசாலையில் கல்வி கற்பவர்கள் டாக்டர்களாக, பொறியியலாளர்களாக, கணக்காளராக, ஆசிரியராக, பத்திரிகையாளராக, அல்லது குடும்பத் தலைவியாகக்கூட வரலாம். ஆனால் இப்பதவிகளை நீங்கள் அலங்கரித்து, தனக்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் பூரண பயனைக் காட்டுவதிலே பெருமையுண்டு நீங்கள் பெறும் கல்வி கட்டியெழுப்பப்படும் நவசமுதாயத்துக்கு பயனைக் கொடுக்கும்போது உலகமே உய்வடைகின்றது. வாழ்க்கைக்குஇனிது வளம் சேர்ப்பதே பெருமை என்று எண்ணுங்கள் என்றார்.

கல்லூரி அதிபர் திருமதி ஏ. இராஜரத்தினம் தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் ''இன்று மாணவர்கள் மத்தியில் சமய ஞானம் அருகி வருவதைக் காணக்கூடியதாகஉள்ளது. சமயத்தை மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒரு பாடமாகக் கருதக்கூடாது. மனிதகுலத்தின் ஆன்ம ஈடேற்றத்துக்கு சமயஞானம் அவசியம் சமயம் ஒழுக்கங்களையே போதிக்கின்றது. நல்வாழ்வு பெறவும் சமயஅறிவு இன்றியமையாதது.

''இவ்வருடம் வடபகுதியில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை காரணமாக வகுப்புக்களைப் பூரணமாக நடத்த முடியாமல் இருப்பது கவலைக்குரியது. எனினும் முடிந்தவரை ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் மாணவர்களின் கல்வியினை ஓரளவிற்கு மேம்படுத்த முடிந்தது'', என்றார்.

கல்லூரி உபஅதிபர் திருமதி கே. தம்பிராசா வரவேற்புரை நிகழ்த்தினார். பரிசு பெற்றமாணவிகளுக்கு திருமதி நச்சினார்க்கினியார் பரிசில்களை வழங்கினார். மாவட்டப் போட்டிகளில், பரிசுபெற்ற நாட்டியநாடகமும் மேடையேற்றப்பட்டது [கெ]

## காவலூரில் 13 கழகங்கள்

(காரைநகர்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 13 விளையாட்டுக் கழகங்கள் பாராளுமன்ற விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் பதிவுபெற விண்ணப்பித்துள்ளன.

இதுவரை எட்டுக் கழகங்களுக்குப் பதிவுச் சான்றிதழ்கள் கிடைத்துள்ளதாக விளையாட்டுப் பொறுப்பதிகாரி திரு. பி. பொன்னுச்சாமிதெரிவித்தார்.

## பெண்களுக்கு பெருமை தேடியவர்

(புலோலி)

இந்தியாவின் காவல் தெய்வமாக இமயம்போல் உயர்ந்த அன்னை இந்திராகாந்தி பெண்களுக்குப் பெருமை தேடித்தந்தவர்.'' என்று புலோலி தெற்கு குடும்பநல மகளிர் குழுத்தலைவி திருமதி. எஸ். தர்மரட்ணம் பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் மறைவையொட்டி விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பரு. பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி

(புலோலி)

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் டக்லஸ் பீரிஸ் இடமாற்றம் பெற்றுள்ளார். பருத்தித்துறை பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய இன்ஸ்பெக்டர் ஜயந்தகமகே கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## மாவனல்லையில் இரு தமிழ் இளைஞர் கைது!

(கொழும்பு)

ரூபவாஹினி தொலை அஞ்சல் நிலையத்தை தகர்க்கும் முயற்சிதொடர்பாக இருதமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவிலிருந்து கொழும்பு செல்லும் பஸ்ஸில் இவர்களை மாவனல்லையில் வைத்து பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்தே இவர்கள் கைதானார்கள். இவர்களின் தலையிலும் கையிலும் காயங்கள் காணப்பட்டதாகவும் இவை துப்பாக்கி சூட்டினால் அல்லது நெருப்பினால் ஏற்பட்டதென்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

## புதிய அதிபரின் சேவை



[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு பெண்கள் பாடசாலை சென்திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தின் புதிய அதிபர் செல்வி இராசமணி சின்னத்தம்பி எடுத்து வரும் நடவடிக்கையினால் வித்தியாலயம் துரிதகதியில் முன்னேற்றம்கண்டு வருகிறது.

மாணவர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் நலன் விருப்பிகள் செல்வி சின்னத் தம்பியைப் பாராட்டியுள்ளனர்.

சிற்றுண்டிச்சாலை பாடசாலையில் இல்லாத குறை நிவர்த்திக்கப்பட்டுள்ளது. புதிய சித்திர ஆய்வுகூடம் ஒன்று அமைத்தமை, இளைஞர் மன்ற உதவியுடன் 27 ஆயிரம் ரூபா செலவிலான விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டமை அதிபரின் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

எமது ஸ்தாபனத்திற்குச் சொந்தமான (Toyota-Lorry) ரொயரா லொறி [24 Sri 7107] ஒன்றும் Apple-Computer ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில், தொடர்புகொள்ளவும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. T Phone Neervely-1.
705

நல்ல நிலையிலுள்ள 86 ஸ்ரீ Yamaha YB 80 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சுந்தரகுமார், 'பத்மகிரி' கட்டுடை, மானிப்பாய்
727

மானிப்பாய் மேற்கில் 2½ பரப்புக்காணி சுற்றுமதிலுடனும், வீட்டுடனும் சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 440, கே.கே எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது சுந்தரவாய், மானிப்பாய் தெற்கு
725

ஒருநாள், இரண்டு மாதம், பத்து மாதம் முட்டையிடும் நல்ல இன (Hybrids) பிறவுண் கோழிக்குஞ்சுகள், கோழிகள் உண்டு. கால்நடை வைத்திய நிலையம், 89, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
735

## தொழிற் பயிற்சிகள்

THEORY AND PRACTICALS

ஆரம்பம்: 16-11-84

[1] Industrial and House Wiring - 2மாதம்-Rs. 500/-
[2] Motor Re-winding - 4 மாதம் - Rs. 800/-
[3] Electrical Engineering Practice - 6மாதம்-Rs. 850/-

கல்வித்தகைமை:
G. C. E. ORD. LEVEL விஞ்ஞானப் பாடங்கள்.

செய்முறைப் பயிற்சி — ஒமேகாவில்

OMEGA TECHNICAL INSTITUTE,
448, K. K. S. ROAD, JAFFNA.
(Near - Jaffna Hindu College)

## சவூதி அரேபியா துறைமுக வேலைவாய்ப்பு

(Siyanco Saudi Maintenance Ltd. for Jeddah Port)

குறுகிய கால எல்லைக்குள் பிரயாணம்

ஷிப்போர்ட் வேலையாட்கள்
(SHIP BOARD WORKERS) — S R 50/-
(Fair Knowledge of English Essential)
(Ton rigging Handle lines Chipping Painting, Ect)

டொக் வேலையாட்கள்
(DOCK WORKERS) — S. R. 400/-
(Rigging, Lash unloading, Signal man, Ect)

ஜனிற்றேர்ஸ்
(JANITORS) — S. R 400/-
(Fair Knowledge of Spoken English Essential)
(Cleaning Stairs, Stores. Office, ect)

வயதெல்லை: 21 — 40 இற்கிடையில்
ஒப்பந்த காலம்: 03 வருடம்
தங்குமிடவசதி இலவசம்
சாப்பாடு — மாதம் 200/- S. R. அல்லது இலவசம்

விண்ணப்பதாரர்:- பாஸ்போட்டும் 10 புகைப்படங்களும் கல்விச்சான்றிதழ், வேலை அனுபவச் சான்றிதழ், சமயச் சான்றிதழ், நற்சான்றிதழ்களுடன்
பின்வரும் முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

ஜெய் என்ரபிறைசஸ்
JAY ENTERPRISES
77, Centre Road, Mattakulia.
Labour Licence No. 426 Ref. FE/6/FEA/843./4777
(734)

## லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

யாழ்ப்பாணம்.

### பிரவேசம் — 1985

தகைமை: க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தி.
வைத்திய பரம்பரையில் வந்தவர்களுக்கு க. பொ. த. (சாதாரணப்) பரீட்சையில் மூன்று பாடங்களில் திறமைச்சித்தி.

விண்ணப்பங்கள் 15-12-1984 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
மனுப்பத்திரம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(726)

## இந்தியப் பொதுத்தேர்தலுடன்
# தமிழக சட்டசபைத்தேர்தல்!

(புதுடில்லி)

அடுத்த மாதம் 24ம் திகதி இந்தியப் பொதுத் தேர்தல் நடக்கும் போதே தமிழ்நாடு மாநில சட்டப் பேரவைத் தேர்தலும் நடாத்தப்பட வுள்ளதாகத் தமிழக நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் புதுடில்லியில் அறிவித்தார்.

இந்தியப் பிரதமர் திரு.ரஜீவ் காந்தியுடன் பேசிய பின்னர் எடுத்த முடிவை அறிவித்தார்.

சட்ட சபையைக் கலைத்து அதன் தேர்தலை இந்திய லோக் சபைத் தேர்தல் நடக்கும் போது நடாத்த வேண்டுமென்ற சிபார்சை தமிழ்நாடு ஆளுநரிடம் நெடுஞ்செழியன் இன்று கையளிப்பார்.

சட்டசபைத் தேர்தலுக்கு இந்திரா காங்கிரஸுடன் அ.தி.மு.க.வுக்குள்ள உடன்பாடு, லோக்சபா தேர்தலுக்கும் இருக்குமென்று திரு. நெடுஞ்செழியன் நேற்றுத் தெரிவித்தார்.

## "இந்தியாவைப்பிரிக்க பாகிஸ்தான் முயற்சி!"
### வெளியுறவு அமைச்சர் குற்றச்சாட்டு

[புதுடில்லி]

இந்தியாவில் பிரிவினையை ஏற்படுத்த பாகிஸ்தான் மிக மோசமான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சு குற்றம் சாட்டியுள்ளது.

"சீக்கியத் தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தான் உற்சாகமளிக்கிறது. பாகிஸ்தானில் சீக்கியர்கள்கூடி இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் பாகிஸ்தானில் இவ்விதமான கூட்டங்கள் நடந்துள்ளன" என்று அந்தக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இன்னொரு நாட்டின் உள் விவகாரத்தில் மற்றொரு நாடு தலையிடக்கூடாது என்ற விதியைப் பாகிஸ்தான் மீறுகிறது என்றும் அந்தக் குறிப்புக் கடுமையாக விமர்சித்துள்ளது.

## சீக்கியர் நன்றி

(புதுடில்லி)

நான்கு நாட்களாக இந்த நாடு காணாத துன்பத்தை அனுபவித்த போதும் தலைநகர் சீக்கியமக்கள் இந்துநண்பர்கள் அயலவர் மற்றும் பொது மக்கள் செய்த பேருதவியை என்றும் மறவோம் எமக்கென்று புகலிடம் அளித்தவர்களும், எங்கள் அவசரத் தேவைகளை பூர்த்தி செய்தவர்களையும் நாம் என்றும் மறவோம்.

சீக்கியர்களின் உயிரைத் தப்ப வைக்க இந்துக்கள் காட்டிய வீரச் செயல்கள் அனந்தம். அவர்களுக்கு எல்லாம் நன்றி.

இவ்வாறு புதுடில்லி சீக்கிய மக்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# "தமிழ்தீவிரவாத இளைஞர்கள் ஒற்றுமைப்பட வேண்டும்"
## தமிழக சபாநாயகர் வேண்டுகோள்

(சென்னை)

"தமிழ் தீவிரவாத இளைஞர்கள் இந்த கடைசி நேரத்திலாவது ஒற்றுமைப்பட வேண்டும்" என்று தமிழக சபாநாயகர் திரு ராஜாராம், சென்னையில் பாரதப் பிரதமர் இந்திராவின் மறைவு குறித்து நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

ஈழத் தகவல் நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில், சகல கட்சிகளும் சகல இயக்கங்களும் கலந்துகொண்டு அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள். பெண்கள், சிறுவர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

சுதந்திர தமிழ் ஈழத்திற்காக போராடிவரும், தமிழ் தீவிரவாத இளைஞர் குழுக்கள் ஒற்றுமைப்பட வேண்டுமென்றும் அதுவே பாரத பிரதமர் இந்திராவுக்கு செலுத்தும் முக்கிய அஞ்சலியாகுமென்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஒரே மேடையில் பல்வேறு கட்சிகள், இயக்கங்களைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்ட இக்கூட்டம், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என பார்வையாளர்கள் மதிப்பிட்டனர்.

இந்திரா கொலை செய்யப்பட்டதை கண்டித்து தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு ஏ அமிர்தலிங்கம் பேசுகையில் "சுதந்திரத்திற்காகப் போராடும் இயக்கங்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாதது பெரிய தடையாகும் என்றும், ஒற்றுமைப்பட வேண்டியது அவசியம்" என்றும் கூறினார்.

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு உமா மகேஸ்வரன் பேசுகையில் "பாரதப் பிரதமர் இந்திரா படுகொலை செய்யப்பட்டது அபிவிருத்தி, முன்னேற்றம், அமைதியை விரும்பும் நாடுகளுக்கு பலத்த சேதம்" என்றும் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழக சார்பில் பேசிய திரு சா. கணேசன், ஈழத்தமிழ்மக்களைப் பாதுகாக்க இந்திய இராணுவத்தை அனுப்பவேண்டுமென்று வலியுறுத்தினார்.

தேசிய ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் வந்த போதெல்லாம், தி.மு.க. பாரத பிரதமர் இந்திராவிற்குகைகொடுத்து வந்ததாகவும் அவர் கூறினார்.

அ.இ.தி.மு.க.வைச்சேர்ந்த திரு துரை கோவிந்தராஜன் பேசுகையில், பாரதப் பிரதமர் இலங்கைதமிழர்பிரச்னையை மிக சாதுர்யமாக கையாண்டு வந்ததாகக் கூறினார்.

தமிழ் ஈழ மாணவர் இயக்க தலைவர் திரு அசோகன் பேசுகையில், தீவிரவாத தமிழ் இளைஞர்கள் ஒற்றுமைப்பட வேண்டும்" என்றார்.

'ஈரோஸ் சார்பில் பேசிய திரு இரத்தினசபாபதி, விடுதலைக்காக போராடும் மக்கள் இயக்கங்களுக்கு இந்திரா ஆதரவளித்து வந்தார் என்று கூறினார்.

கூட்டணித் தலைவர் திரு எம் சிவசிதம்பரம், திரு வி. யோகேஸ்வரன், காசி ஆனந்தன், திரு ரி ஜெயதுலசூரியர் கரிகாலன்: ஈழமணி, தி.வாசுதேவா, தமிழ் ஈழ விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பிரதிநிதிகள் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## ஆழ்ந்த துயரமும் ஆதரவும்

(புதுடில்லி)

பொது மக்கள், அரசியல் வாதிகள் ஆயிரக்கணக்கில் புதிய பிரதமர் ரஜீவ் காந்தியை நேரில் சந்தித்து ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டு, 'தங்கள்' பூரண ஆதரவை அளிப்பதாக உறுதி கூறினர்.

# சூறுவளிக்கு 15பேர் பலி!

[சென்னை]

தமிழகத்தில் சூறுவளிக்கு பதினைந்துபேர் இதுவரை பலியாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. ஒன்றரை லட்சம் மக்கள் வீடிழந்துவிட்டனர். சென்னைப் பகுதியிலேயே இந்த உயிரிழப்புகள் நடந்துள்ளன.

வீதிகளில் போக்குவரத்து சனநடமாட்டம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. பல இடங்களிலும் மின்சார விநியோகம் நிறுத்திவைக்கப்பட்டுவிட்டன.

மீட்புவேலைகளில் ஈடுபட தமிழ்நாட்டில் முப்படைகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

## கடைசி நாள்வரை ஆற்றிய உரைகள்
# இந்திராவின் பேச்சுக்கள் இரு பாகங்களாக வரும்!

[புதுடில்லி]

இந்திராவின் பேச்சுக்களில் இன்னும் இருபாகங்கள் வெளிவரவுள்ளன. அவர் வாழ் நாள் வரைக்கும் பேசிய பேச்சுக்கள் இந்த இருபாகங்களில் இடம் பெறும். இவை இந்திராவின் பிறந்த தினமான 19ம் திகதி அரச தகவல் பகுதியினரால் வெளியிட்டு வைக்கப்படும்.

ஏற்கனவே இவர்பிரதமராக வந்த பின் ஆற்றிய உரைகள் இரு பாகங்களாக வெளி வந்துள்ளன.

# எம். ஜி. ஆர் கட்டிலில் உட்கார்ந்து இருந்தார்!

[நியூயோர்க்]

நியூயோர்க்கில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதல்வர் எம் ஜி ஆர். குழாய் உதவியின்றிச் சாதாரணமாக நேற்று நீராகாரம் அருந்தினார்!

எம். ஜி ஆரின் உடல்நிலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இப்போது ஏற்பட்டுள்ளது.

அவர் படுக்கையிலேயே நேற்று உட்கார்ந்திருந்தார்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே நேற்று எம். ஜி ஆரின் உடல் நிலைகுறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

சிறுநீரக மாற்றுச் சிகிச்சை அவசியமா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்றும் ஹண்டே தெரிவித்தார்.

## பரம்பரை ஆட்சிஎன்று கூறுவது
# மக்களுக்கு விடும் இகழ்ச்சி!

[பம்பாய்]

ஜனாதிபதி ஸெயில் சிங் உடனடியாக ரஜீவை பிரதமராக நியமித்தது அரசியல் சாசனத்திற்கு உடன்பாடானதும், ஜனநாயக கோட்பாட்டுக்கும் உகந்ததாகும்.

இந்திய ரசாயனஉர அமைச்சர் திரு. வசந் சக்தி கூறியுள்ளார். பிரதமரை நியமிப்பது ஜனாதிபதியின் தனிப்பட்ட உரிமை. பதில் பிரதமரை நியமிக்க அரசியல் சாசனத்தில் இடமில்லை. பரம்பரை ஆட்சி என்று எதிர்க்கட்சியினர் கூறுவது மக்களைப்பரிகாசம் செய்வதாகும். மக்கள் தங்கள் வாக்குரிமையை இன்னும் சில நாட்களில் அளிப்பார்கள். எனவே ரஜீவ்காந்தி மக்கள்ஆதரவைக் கொண்டே பிரதமராகத் தொடரலாம் என்று அமைச்சர் மேலும் சொன்னார்.


ரெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN and HOLLAND)
★ அலுமினியம் தகடுகள்
★ வெள்ளைச் சிமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO

மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும்
Rs. 55/-க்கு மேல்
கிடைக்குமிடம்:

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.
தொலைபேசி: 34411 — 31511

(530)


## அகதிகளாக தமிழ் விதவைகள்

(சென்னை)

சென்னையில் அகதிகளாக சுமார் 220 ஈழத் தமிழ் விதவைகள் தங்கியிருக்கிறார்கள்.

ஒரு இடத்தில் 100 விதவைகளும் மற்றொரு இடத்தில் 120 விதவைகளும் தங்கியுள்ளார்கள்

இவர்கள் இலங்கையில் நடந்த 83யூலைக் கலவரத்தின் பின் இங்கு வந்து தங்கியுள்ளார்கள் இவர்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

## எம். ஜி. ஆர். சுகமடைய பிரார்த்தனை

[மானிப்பாய்]

"தமிழ் மக்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் அன்புக் கரம் நீட்டி ஆதரவு வழங்கி வரும் தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம், ஜி ராமச்சந்திரன் நோய்வாய்ப்பட்டிருப்பது அனைவருக்கும் கவலைக்குரிய விடயமாகும். தமிழ் அன்னையின் பேரால் அவர் பூரண சுகம்பெற்று பல்லாண்டு காலம் நீடூழிவாழ இறையருள் கிடைப்பதாக".

இவ்வாறு கோப்பாய் சூரியோதய சனசமூக நிலையமக்களின் ஆதரவுடன் கோப்பாய் தெற்கு அத்தித்தோட்ட பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற விசேடபூசையில் பேசியநிலையச் செயலாளர் திரு. எம். கே. இளையப்பு

(7-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## "இலங்கைத் தமிழர்களுக்கு பேரிழப்பு"

(சாவகச்சேரி)

"உலகில் அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காக என்றும் குரல் கொடுத்து வந்த நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய அன்னை இந்திராகாந்தியின் திடீர் இழப்பு இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்குப் பேரிழப்பாகும். அன்னை இந்திராவின் ஆட்சிக்காலத்திலேயே தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என எதிர்பார்த்தோம். ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது துர் அதிர்ஷ்டமே".

இவ்வாறு சைவப்புலவர் திரு. கே. வி மகாலிங்கம் சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவிலில் நடைபெற்றஅன்னை இந்திராவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நடாத்தப்பெற்ற விசேட பிரார்த்தனையின் போது உரையாற்றினார்.

### மணி வாக்கு

முதல்தரமான மனிதர்கள் கருத்துக்களைப் பற்றிப் பேசி விவாதிக்கிறார்கள். சாதாரண மனிதர்கள் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசி விவாதிக்கிறார்கள். மட்டரகமான மனிதர்கள் மட்டுமே தனிநபர்களைப் புறம் பேசி விவாதிக்கிறார்கள்.

— சீனப் பழமொழி

# இந்திராவின் மகத்தான வரலாற்றுமிக்கப் பணி!

## அணிசேரா இயக்கம் அஞ்சலி

ஐ. நா. (நியூயோர்க்) நவ. 14

நூற்றியொரு அங்கத்தவர்களைக் கொண்ட அணிசேரா இயக்கம் மறைந்த பிரதமர் இந்திராகாந்தி இவ் இயக்கத்துக்கு அளித்த மகத்தான வரலாற்று மிக்க பணியை பாராட்டி அவர் விட்டுச் சென்ற மரபில் தாம் உலக சமாதானமும், ஆயுதக் குறைப்பு மூன்றும் உலக அபிவிருத்தி, போன்றவற்றில் ஒற்றுமையுடனும் ஒருங்கிணைந்து செயற்படுவோம் என்று உறுதி பூண்டனர்.

அணிசேரா நாடுகளின் விசேட பொதுக்கூட்டமொன்றில் திருமதி காந்திக்கு ஒரு உருக்கமான அஞ்சலியை செலுத்தினர்.

அநீதி, வறுமை, பசி, பட்டினி, அந்நிய ஆதிக்கம், பாகுபாடு, சுரண்டல் போன்ற தீமைகளை துணிவாகவும் ஆழ்ந்த உணர்வுடனும் போராடிய இந்த நூற்றாண்டு கண்ட பெண்மணி யென்று அங்கு புகழப்பட்டது.

கோழைத்தனமான குரோதக் கொலையைக் கண்டித்து புதிய பிரதமர் ரஜீவ் இந்திய நாட்டின் மரபுக்கும் இந்திராவின் தலைமைத்துவத்துக்கும் பொருத்தமான முறையில் பணியாற்றுவாரென்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

# நமது நோக்கு

## இந்தத் தொடர் கதைக்கு முற்றுப்புள்ளி இடுக!

விண்வெளிப் பிரயாணம் பற்றி உலகில் நிலவிய ஆர்வமும், அக்கறையும் சந்திரனில் நீல் ஆம்ஸ்ரோங் காலடி வைத்த கையோடு அடிபட்டுபோய்விட்டது. இப்பொழுது விண்வெளிப் பிரயாணம் என்பது சர்வ சாதாரணமான ஒருவிடயம் ஆகிவிட்டது. ஒருவேளை வேறு கிரகங்களில் மனிதன் போய் இறங்குவதற்கு புதிய முயற்சிகள் மேற்கொள்ளப் படும்போது முன்னர்இருந்த ஆர்வமும் அக்கறையும் பரபரப்பும் மீண்டும் தோன்றலாம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிறு துப்பாக்கி வெடிக்கும் சத்தமானாலும் போதும் பெரும் பரபரப்பும் அங்கலாய்ப்பும் நிலவிய ஒரு காலமிருந்தது. அப்படியான சிறுசம்பவங்கள் தினசரிப் பத்திரிகைகளின்முதற் பக்கத் தலைப்புச் செய்திகளாக வெளிவந்து மக்கள் முண்டியடித்துக் கொண்டு அவைகளை வாங்கிப் படித்த காலமும் ஒன்றிருந்தது!

ஆனால் இன்று!

குண்டுவெடிப்புக்கள், துப்பாக்கி வேட்டுக்கள் மட்டுமல்ல, அப்பாவி சாதாரண மக்கள் சுட்டுத்தள்ளப்படுவதும், வேலிகள், வீடுகள், கட்டிடங்கள் சுட்டெரிக்கப்படுவதும் இப்பகுதிகளில் சர்வசாதாரணமாகிவிட்டன.

தற்செயலாகஒரு சிப்பாய் காயமுற்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டாலும் கூட மக்கள் என்ன நடக்குமோ என்று கிலிகொண்டு ஓடும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

கொலை, கொள்ளை, பலி, நாசம், தீக்கிரை, தரைமட்டம் என்ற அடைமொழிக்குப் பதிலாக வேறு சொற்களைத் தேடும் நிலை பத்திரிகையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த 9-ம் திகதி யாழ். நகரில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றை எமது பத்திரிகை பின்வருமாறு தலைப்பிட்டு வெளியிட்டிருந்தது.

''யாழ். நகரில் குண்டு வெடிப்பு! துப்பாக்கிச் சூடு! சிலர் பலி, பலர் காயம்!!!''

இத்தலைப்புக்குரிய செய்தி பின்வருமாறு அமைந்தது:-

''யாழ். நகரில் நேற்று நண்பகல் சுதந்திரமாகவும் சுறுசுறுப்பாகவும் தத்தம் கருமங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அப்பாவி மக்கள் மத்தியில் திடீரெனக் குண்டு வெடித்ததுடன், துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து நகரம் அல்லோலகல்லோலப்பட்டது. இச்சம்பவத்தின்போது 8 பேர் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் ஐவரின் சடலங்களே யாழ். ஆஸ்பத்திரியிலும், தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலும் வைக்கப்பட்டிருந்தன. மூன்று பெண்கள் உட்பட 35 பேர் படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்''

யாழ்ப்பாண நகரில் மேற்படி குண்டுவெடித்த சந்தர்ப்பம் குறித்து பல்வேறுவிதமான கதைகள் பரவியுள்ளன. அதையடுத்து நடந்த சம்பவம் பற்றிய செய்தி இங்கு நடக்கும் அராஜக நிலைமைகளைத் தெளிவாக எடுத்தியம்புகின்றது. இச்சம்பவம் குறித்து பல்வேறு இயக்கங்களும், ஸ்தாபனங்களும் கண்டனம் தெரிவித்துள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ஜனாதிபதியையும் கொழும்பில் சந்தித்து பேசியுள்ளனர்.

இருந்தபோதிலும் நிலைமை மாறுமா என்பதே கேள்வியாகவுள்ளது. இவ்வாறான சந்திப்புகளும், கண்டனங்களும், வாக்குறுதிகளும் இதுவரைக்கும் பெரும்பாலும் பயன்தரவில்லை. இனிமேல் பயன்தருமென்று எதிர்பார்க்கலாமா?

எங்கோ ஓர் இடத்தில் தீவிரவாத இளைஞர்களுக்கும் ஆயுதப் படையினருக்குமிடையில் மோதல் ஏற்படுகிறதென வைத்துக்கொள்வோம். அந்த இடத்திலிருந்து பல மைல் சுற்றளவிலுள்ள மக்கள் அனைவருமே கிலிகொண்டு நடுங்குகிறார்கள்.

இவ்வாறு சாதாரண பொதுமக்கள் ஏன் பழிவாங்கப்படுகிறார்கள் என்பதற்கு அரசாங்கமோ, அதிகாரிகளோ இதுவரைக்கும் எதுவித சரியான விளக்கமும் தரவில்லை. இங்கு ஆயுதப்படையினர் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தென்பகுதியில் வன்செயல்களாக வெடிக்காதிருப்பதற்கு பொதுமக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் உதவுவதாகக் கருதப்படுமானால் அது நகைப்புக்கிடந்தருவதாகும்.

பொதுமக்கள் - அவர்கள் வடக்கிலோ கிழக்கிலோ அன்றி தெற்கில் இருந்தாலும் பாதுகாப்பளிக்க வேண்டியது பொறுப்புள்ள அரசின் கடமை. அதைவிடுத்து ஆயுதப்படையினரின் தான்தோன்றித்தனமான செயல்களுக்கு நியாயம் கற்பித்துக் கொண்டிருப்பது குழந்தைப்பிள்ளைத்தனமாகும்.

வீதியால் நடந்து சென்று கொண்டிருக்கும் கல்லூரி மாணவிகள் மீது கவச வாகனத்திலிருந்து திரவம் வீசி இம்சை படுத்துமளவுக்கு நிலைமை மோசமாகியிருப்பதை கொழும்பிலுள்ள பெரியவர்கள் அறிய வேண்டும். அப்பாவி மாணவர்களை வழியில் மறித்து வாகனத்தில் ஏற்றி நையப்புடைத்து இறக்கி விட்டது போய் இப்போது மாணவிகள், ஆசிரியைகள் மீது தண்ணீர் பீச்சும் சேட்டை ஆரம்பமாகியுள்ளது.

இது பொது மக்களைச்சீண்டி ஆத்திரமடையச் செய்யும் காரியம் அல்லவா! இப்படியான சம்பவம் இனிமேல் நடைபெறுமல் பார்த்துக்கொள்வதாக கேணல் விமலரத்ன உறுதியளித்திருப்பதாக செய்தி கூறுகிறது.

அது வெறும் செய்தியாக இருக்கலாகாது என்பதையே நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

# அரசியல் கொலை!

## பிராவ்டா குற்றச்சாட்டு

(மாஸ்கோ)

மாஸ்கோ தேசிய தினசரி 'பிராவ்டா' இந்திராவின் கொலையை ஒரு பாரதூரமான நோக்கம்கொண்ட அரசியல் கொலை என்று குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச பிற்போக்குச் சக்திகளின் சூழ்ச்சிகளுக்கு இந்திரா பலியானதை அப்பத்திரிகை விளக்குகிறது.

ஒவ்வொரு தேசமும் சுதந்திரமாகவும், வறுமை நீங்கவும்; நாட்டின் இறைமையையும், செல்வத்தையும் பாதுகாப்பு உரிமைக்கும் அஞ்சா நெஞ்சுடன் வாதாடியதையும், இவற்றுக்கு மாறாகச் செயல்படும் பிற்போக்குச் சக்திகளை வெறுத்தார். இந்திராவின் கொலையை மாஸ்கோ தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயல்கிறது என்று அமெரிக்க ஜனாதிபதி றீகன் கூறுகிறார். தென் ஆசியாவிலும், அதைச் சார்ந்த மற்றப் பிரதேசங்களிலும் ஆயுதக்குவிப்பை நடத்தும் சக்திகளே இவ்விதகொலையைப் பயன்படுத்தி இந்திராவின் நிலைப்பாட்டை குலைக்க முனைகின்றன என்று 'பிராவ்டா' மேலும் தெரிவித்தது.

# பெரியதின் பெருமையும் சிறியதின் சிறுமையும்

''அழுவார் அழுவாரெல்லாம் தன் கரைச்சல், திருவன் பெண்டிலுக்கு அழ ஆளில்லை'' என்பது ஒரு நாடோடிப் பழமொழி.

எங்கள் பந்தோபஸ்து அமைச்சர் திருவாயால் சில சமயங்களில் உதிரும் கருத்துக்கள் இந்தப் பழமொழியைத் தான் நினைவு படுத்துகிறது.

''இலங்கையில் 83-ஆம் ஆண்டு ஜூலையில் கலவரம் நடந்தபோது. அது சிலகாடையர்களின் செயலாக இருந்த போதிலும் சில நாடுகள் அச்செயலுக்காக பெரும்பான்மையான பௌத்தர்களைக் குற்றம் சாட்டின. இதைவிட ஆயிரம் மடங்கு இந்தியாவில் சீக்கியர்கள் கொல்லப்படுவதும், அவர்களுடைய சொத்துக்கள் அழிக்கப்படுவதும் கவலைக்குரியது'' என்று நமது தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி கொழும்புக்கு அருகேயுள்ள எகலியகொட என்னுமிடத்தில் நடந்த ஒரு வைபவத்தில் கடந்த சனிக்கிழமை பேசுகையில் கூறியிருக்கிறார்.

இலங்கையை விட ஆயிரம் மடங்குக்குமேல் பெரியநாடு இந்தியா. இலங்கையின் ஜனத்தொகையைவிட எழுபது மடங்கு அதிகமான ஜனத்தொகையைக் கொண்டதும் இந்தியா.

பதினன்கு மொழிகள் அந்நாட்டில் உத்தியோக மொழியாக அங்கீகரிக்கப் பெற்றுள்ள மொழிகள். ஆனால் இருபத்ரெண்டுக்கு மேற்பட்டமொழிகளைப் பேசும் மக்கள் அங்கு வாழ்கின்றார்கள்.

இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கியம், சிந்தி, பௌத்தம், ஜைனம் எனப் பல மதங்களைப் பின்பற்றும் மக்கள் இந்தியாவில் வாழுகின்றார்கள்.

இத்தனை வேறுபாடுகளைக் கொண்ட மக்களையும் ஒரே கொடியின்கீழ் ஆட்சி செய்வதென்பது வெகு சுலபமல்ல ஆனாலும் காந்தி மகாத்மா காட்டிய வழியில் இந்திராகாந்தி வரை தங்கள் தியாகம் நிறைந்த சேவையால் ஒன்றுபட்ட இந்திய சமுதாயத்தை கட்டிக் காத்து வந்திருக்கிறார்கள்.

இந்திய மக்களின் ஒப்பற்ற தலைவியும், வரலாறு படைத்த காவியத் தலைவியும், தியாக பரம்பரையில் வந்த வீராங்கனையுமான திருமதி இந்திரா காந்தி சில கொலை வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டார் என்றசெய்தி எவ்வளவு பயங்கரமானது. இந்திராவின் இல்லத்திலேயே எட்டு வருடங்களாக இருந்து அவருக்குப் பாதுகாப்பு அளிப்பதையேகடமையாகக் கொண்டிருந்த ஒருவனே அவரைக் கொலை செய்தான் என்ற செய்தியைக் கேட்டதும் எந்த மனிதனும் ஆத்திரம் கொள்ளாமலிருப்பானு?

**எஸ். எம். ஜி.**

இந்திராவின் கொலைச் செய்தி கேட்டு உலகமே திடுக்கிட்டது!

இந்திய மக்கள் மட்டுமல்ல மனிதாபிமானம் படைத்த உலக மக்கள் நெஞ்சம் பதறியது!

இந்திரா சுடப்பட்டார் என்றும் இந்திரா இறந்துவிட்டார் கொலை வெறியர்களின் குறி தவறவில்லை என்றும் செய்தி வெளியானதும் மக்கள் ஆத்திரம் கொண்டனர்.

கொலை செய்தவர்களின் சமூகத்வர் மீது மக்கள் தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள எத்தனித்தனர்!

இந்திராவின் மீதுள்ள அன்பினுல் விளைந்த ஆத்திரம் இந்தியாவில் பல இடங்களில் கலகமாக வெடித்தது. ஆனுல் அச் செய்தியை மிகைப்படுத்தியது மேனுட்டு தொலைதொடர்புசாதனம்என்று சொல்லப் பட்டிருக்கிறது. இந்தியாவின் தவப்புதல்வி நாட்டுக்காகத் தமது இரத்தத்தையும் சிந்தி உயிரையும் தியாகம் செய்து விட்ட வேளையில் செய்வதறியாது திகைத்து நின்ற இந்திராவின் தவப்புதல்வர் திரு ரஜீவ் காந்தியிடம் அமைச்சரவை நாட்டின் ஆட்சி நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்தது!

துயரம் நிறைந்த இச்சந்தர்ப்பத்தில் தாயை இழந்து சோகமே உருவாக நின்ற ரஜீவ் தாயினும் மேலாகத் தாய் நாட்டின் நிலையைச் சிந்தித்தார்!

அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து நாட்டின் நிலையை எடுத்துக் கூறி அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை செய்தார்!

சீக்கிய சமூகத்தின் தேச பக்தியையும் ஜாலியன் வாலா பார்க்கில் சுதந்திரப் போராட்டத்தின் போது நிகழ்ந்த படுகொலையையும் சீக்கியரும் இந்துக்களும் ஒன்று சேர்ந்து செய்ததியாகங்களையும் நினைவு கூர்ந்து அனைத்துக் கட்சியினருடன் சேர்ந்து பிரதமர் ரஜீவ் காந்தி மக்களுக்கு அமைதி காக்கும்படி வேண்டுகோள் விடுத்தார்.

இதனுடனில்லாது கலகத்தையடக்குவதற்குஉறுதியுடன் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினர்.

கடமையில் தவறியது கவர்னராக இருந்தாலும் அவரையும் உடனடியாக வேலை நீக்கம் செய்த ரஜீவ் காந்தி உறுதியுடன் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக நான்கு தினங்களுக்குள்ளேயே நிலைமை சற்றுச் சீரடையத் தொடங்கிறது.

இந்தியாவே இந்திராவின் கொலையுடன் சிதறுண்டுபோகுமென எதிர்பார்த்தவர்களுக்கு இது பெரும் ஏமாற்றமே!

நமது நாட்டில் 1956-ஆம் ஆண்டில் காலி முகத்திடலில் அமைதியாக நடந்த சத்தியாக்கிரகத்தின் போது காவல் துறையினர் கண்விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த போதே காடையர்கள் சத்தியாக்கிரகிகளைக் கண்மூடித்தனமாசத் தாக்கினர்.

அப்போது அரசாங்கம் காவல் துறையினரைத் தட்டிக் கொடுத்தது காடையர்களுக்கு சபாஷ் போட்டது.

(5-ம் பக்கம் 2-ம் கலம்பார்க்க)

# ''வீட்டுக்கு வெளியே குண்டுச்சத்தம்; பின்கதவால் ஓடினேம், சகோதரனை காணவில்லை''

## நெல்லியடி இளைஞர் மரண விசாரணையில் சாட்சியம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

''வீட்டிற்கு அருகாமையில் குண்டுவெடிப்புச்சத்தம் கேட்டது. வீட்டிலிருந்தவர்கள் பின்கதவால் வெளியே ஓடினேம். இறந்தவர் மட்டும் வீட்டிலிருந்தார் பின்னர் திரும்பிவந்து பார்த்தபோது இறந்த எனது சகோதரனை வீட்டில் காணவில்லை. இரண்டு நாட்களின்பின் பத்திரிகைகளில் வெளியான செய்தி மூலம் நெல்லியடியில் எனது சகோதரன் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளதாக அறிந்தோம்''

இவ்வாறு நெல்லியடி பஸ் நிலையத்திற்கு அருகாமையில் சுட்டுக்கொல்லப் பட்டிருந்த வசாவிளானைச் சேர்ந்த நேபாட் ஜெரோம் பெர்ணுண்டஸ் (வயது 24) என்பவரின் மரணவிசாரணையின் போது சாட்சியமளித்த இறந்தவரின் சகோதரி நான்சி பெர்ணுண்டோ குறிப்பிட்டார்.

இறந்தவரின் சடலம் நெல்லியடி வதிரி வீதியில் சிதைவடைந்து கிடக்கக்காணப்பட்டது இதன் அருகாமையில் தூயஇயக்கத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது ''தமிழ்மூவிடுதலைப் புலிகள்'' என்ற குறிப்புக் காணப்பட்டது.

ஸ்தலவிசாரணைகளைப் பருத்தித்துறை நீதவான் திரு. கே கணபதிப்பிள்ளை மேற்கொண்டிருந்தார் பின்னர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்ற மரண விசாரணையில் இறந்தவரின் சகோதரி நான்சி பெர்ணுண்டோ சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது;

''கடந்த 2-ம் திகதி அன்று நாங்கள் வீட்டிலிருந்தோம். இறந்தவரும் வீட்டிலிருந்தார். இரவு 9-30 மணிபோல் வீட்டிற்கு அருகாமையில் குண்டு வெடிப்புச்சத்தமொன்று கேட்டது அதனைத் தொடர்ந்து வீட்டின் பின்கதவால் நாங்கள் வெளியேறிச் சென்ருேம். ஆனல் இறந்தவர் எங்களுடன் வரவில்லை வீட்டில் இருந்தார் நாங்கள் திரும்பிவந்து பார்த்தபோது அவரை வீட்டில் காணவில்லை.

''இறந்தவர் கடந்த 10 வருடங்களாக மனநோயால் பீடிக்கப்பட்டிருந்தார். ஒரு வருடமாகத் தெல்லிப்பழை வைத்தியசாலையில் மனநோய்ச் சிகிச்சை பெற்றுள்ளார். கொழும்பில் வசித்து வந்த எங்கள் குடும்பம் 1983-ம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டே இங்கு வந்து வசித்து வந்தோம்.

பருத்தித்துறை இராணுவ மேஜர் ஆரியரத்தின சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது ''சம்பவதினம் பலாலி இராணுவ முகாமிலிருந்து கேணல் ஆரியபெருமா நெல்லியடியில் ஒருவர் சுடப்பட்டு இறந்திருப்பதாகவும் அங்கு சென்று பொலிசாருக்கு உதவும் படியும் தொலைபேசி மூலம் அறிவித்தார். நான் சென்று பார்த்தபோது நெல்லியடியில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில் மின்கம்பத்திற்கு அருகாமையில் ஒரு சடலம் முகம் குப்புறக்கிடந்தது சடலம் புகைப்படம் பிடிக்கப்பட்ட பின்னர் அடையாளம் காட்டுவதற்கு யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கரணவாய் வடக்கு கிராம சேவை அலுவலர் திரு. கே வீரகத்திப்பிள்ளையும் சாட்சியமளித்தார்.

# பெரியதின் பெருமையும்

(4ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி)

1958 ஆம் ஆண்டில் நாடு முழுவதிலும் திட்டமிட்டுத் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர், கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்று படுபாதகமான செயல்கள் தமிழருக்கு எதிராக ஏவி விடப்பட்டது.

அரசாங்கம் கலகத்தை அடக்குவதற்கோ உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. அப்பொழுது இலங்கையில் இந்திய ஹைமிஷனராக இருந்த திரு கண்டேவியா அன்றைய கவர்னர்ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலகாவைச் சந்தித்து எச்சரிக்கை செய்த பின்னரே அவசரகால நிலையை அரசு பிரகடனம் செய்தது.

அந்த நேரத்தில் கூட அன்றைய அரசு அனைத்துக் கட்சிகளையும் அணைத்து நாட்டில் அமைதியை நிலைநாட்டித் தமிழர்களைப் பாதுகாக்க முன்வரவில்லை.

1961-ம் ஆண்டிலும் இதே நிலைதான்!

1977-ம் ஆண்டில் நாடு முழுவதும் தமிழர்கள் ஆயுதப் படைகளின் உதவியுடன் திட்டமிட்டுத் தாக்கப்பட்டனர், கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்ற பாதகச் செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன!

இச்செயலுக்குக் காரணமானவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை!

1981-ம் ஆண்டு மீண்டும் ஆயுதப்படையின் அனுசரணையுடன் தமிழ்மக்கள் தாக்கப்பட்டார்கள். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு பேன்ற படுபாதகச் செயல்கள் நிகழ்ந்தன.

அரசு நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல, இவற்றுக்குக் காரணமாக இருந்தவர்களுக்குப் பாதுகாப்பும் அளிக்கப்பட்டது பலருக்கு பதவியுயர்வும் கிடைத்த .

1983 ஆம் ஆண்டு ஆடிக்கலவரத்தில் நிகழ்ந்த படுகொலைகள் .சிறைச்சாலைக்குள் தமிழ்க் கைதிகள் மிகமோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டது உட்பட கொள்ளை, தீவைப்பு போன்ற சம்பவங்கள் பற்றி இன்றுவரை எந்த விசாரணையும் இல்லை; எவர் மீதும் நடவடிக்கை எடுக்கப் படவுமில்லை!

இக்கலகங்களுக்கெல்லாம் காரணமானவர்களைக் கண்டு பிடிக்க முயற்சி எடுக்கப்படவுமில்லை

இன்றும் வடபகுதியில் தீவிரவாதிகளினுல் ஒரு சிப்பாய் உயிரிழந்தால் பல அப்பாவிகளை ஆயுதப்படையினர் படுகொலை செய்வதும், வீடுகளுக்குத் தீ வைப்பதும் சர்வசாதாரணமாகி விட்டது.

வவனியாவில் பஸ் பிரயாணிகள் படுகொலை செய்யப்பட்டதை ஆந்திராவில் அச்சமயம் நிகழ்ந்த ஒரு கலகத்தில் பஸ் பயணிகள் கொல்லப்பட்டதுடன் ஒப்பிட்டு அனுதாபந் தெரிவித்திருந்த அதே பந்தோபஸ்து அமைச்சர் தான் இப்போது இந்திய கலவரங்களை இலங்கை ஆடிக்கலவரத்துடன் ஒப்பிடுகிருர்.

அங்கே கலகம் செய்பவர்களை அரசு உடன் கண்டிக்கிறது. ஆயுதப்படைகள் கலகத்தை அடக்கி விடுகின்றன.

இங்கே ஆயுதப்படையைச் சேர்ந்தவர்களே செய்யக்கூடா தவற்றையெல்லாம் செய்கிருர்கள். அரசு தட்டிக்கேட்பதற்குப் பதில் தட்டிக் கொடுக்கிறது.

இந் நிலையில் தயவு செய்து இந்தியாவுடன் இலங்கை கலகங்களை ஒப்பிட்டுப் பேசாதிருப்பதே விவேகம்!

# மகாஜன முதலிடம்

[யாழ்ப்பாணம்]

இவ்வாண்டு நடைபெற்ற 5ம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் கங்கேசன் துறைக் கல்வி வட்டாரத்தில் மகாஜனக் கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது சோ. நளாயினி இ இரமணன், செ. வித்யசங்கர், வி.விஜயகுலன், ஜீ சிவதர்சினி, சி சிவரதி ஆகியோர் பரீட்சையில் சித்தியடைந்தனர்.

## ஏன் முகிழ்த்தோம்?

ஈழத் தமிழ் மறவன் இயற்றுமொரு காவியத்தை
சூழ இருந்தொருகால் சுவைத்திடுவாய் என்றிருந்தோம்
தாள முடியவில்லை... தரணியிலே அச்செய்தி......
பேழை தனிலாவுன் பெருமைமிகு வுடம்பிட்டு
மூளவொரு தணலிடவா முகிழ்த்தோமிப் பாரினிலே?

—பள்ளம்புல நேசன்

★

## தியாகச் சுடர் விளக்கு!

கடைசி துளி ரத்தம் வரை
போராடுவேன் என்று கூறி
கடைசியில் உன் குருதி வெள்ளத்தில்
பாரதத்தை மிதக்க விட்டாய்
தீராத கவலை தந்து எமை
தினமும் இருந்தழுந்தவிட்டு
தியாகச் சுடர் விளக்காய் நீ
தீரமுடன் சென்று விட்டாய்
அன்னையே நீ மனிதருள் தெய்வம்
மங்கையருள் மாணிக்கம்!

—பி. மதிவதனி

★

## இந்திரா — எம் தயாபரி!

வானெனும் உலகினில் அடைந்ததுன் ஆன்மா
வளர்பெரும் பர்வதம் அடைந்ததுன் அஸ்தி
கான்வளர் வேங்கையை அடைந்ததுன் நெஞ்சுரம்
கண்ணீரில் சங்கமம் கருணை
வான்வலச் செய்மதி ரோஹினி ஆகினை
விண்வெளி கடந்ததுன் கோன்மை—
ஏன்விதி பிரித்ததே? எழுபது கோடியும்
ஏங்குதே எம் தயா பரியே!

—க. சிங்காரவேல்

# சாதாரண மக்க...

(முதலாம் பக்க முதலாம் கல தொடர்ச்சி)

## பெற்ரேலுக்கு வரி அதிகரிப்பு

பெற்ரேலின் மொத்த விற்பனவு வரி 4 வீதத்திலிருந்து 20 வீதமாக உயர்த்தப்படும். இது சுத்திகரிப்பு நிலையத்தில் வைத்தே அறவிடப்படும். கூட்டுத்தாபனமே முழு வரிப் பளுவையும் சுமக்கும். இதனுல் பெற்ரேலின் விலையில் மாற்றம் இருக்காது.

## ஹோட்டல்களுக்கும் விற்பனவு வரி

சகல ஹோட்டல்களும், விருந்தினர் சாலைகளும் 5% மொத்த விற்பனவுவரி செலுத்தவேண்டும்.

## முத்திரைத் தீர்வையில் மாற்றம்

காணி கொள்வனவுக்கான முத்திரைத் தீர்வை குறைக்கப் பட்டுள்ளது. இதன் உச்ச எல்லை 4 வீதமாக இருக்கும்

காப்புறுதிப்பத்திரத்தை ஈடாக வைத்து கடன் பெறும்போது முத்திரைத்தீர்வை 10 ரூபாவாக மட்டுமே இருக்கும்.

25 ஆயிரத்துக்குக் குறைவான கடன்களுக்கான விண்ணப்பப்பத்திரத்திற்கான முத்திரை 1000 ரூபாவிற்கு 10 ரூபாவிலிருந்து 1 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

## செல்வ வரி, சொத்துவரி

செல்வவரிக்கான வரி விலக்கு எல்லை 5 லட்சம் ரூபாவாக உயர்த்தப்படும்.

சொத்துவரிக்கான வரிவிலக்கு எல்லை 2லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படும். குடியிருக்கும் வீடு முற்ருக வரி விலக்குபெறும்.

## மோட்டார் வாகன வரியில் மாற்றம்

மோட்டார்வாகனங்களுக்கான வரி 1936-ம் ஆண்டிலிருந்து மாற்றப்படும்.

## இதர யோசனைகள்

சகல தொழில்களுக்கும் லைசன்ஸ் பெறப்படவேண்டும்.

உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கான மொத்த விற்பனவு விரி குறைக்கப்படும்.

இயந்திரங்களுக்கான இறக்குமதித் தீர்வை குறைக்கப்படும். 50 வீதத்துக்கு மேலான உற்பத்தியை ஏற்றுமதி செய்யும் கைத்தொழில்களின் உபயோகத்துக்கென இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்கு தீர்வை அறவிடப்பட மாட்டாது.

அரச, தனியார்துறை ஊழியரிடமிருந்து பெறப்படும் புனரமைப்புவரி டிசம்பர்மாதத்துடன் நிறுத்தப்படும்.

சீனி, கட்டிப்பால் ஆகியவற்றின் மொத்த வின்பனவு வரி குறைக்கப்பட்டுள்ளது.

## தீவிரவாதிகள் வேலை

(கொழும்பு)

'ரூபவாஹினி' தொலைக் காட்சி அஞ்சல் நிலையத் தகர்ப்புமுயற்சிவடபகுதிதீவிரவாத இளைஞர்களின் வேலைதான் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இச்சம்பவம் தொடர்பாக தொடர்ந்துவிசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ)

## உதவி வழங்கியது

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதாசேவாச்சிரமம் அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களின்போது உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உதவிகளை வழங்கியது.

கொக்குவில்லைச் சேர்ந்த திரு நாகரெத்தினம் என்பவர் ஆச்சிரமத்திற்கு வழங்கிய நிதி உதவியைக் கொண்டே பாதிப்படைந்த குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டதாக சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார்.

## உதவி அரசாங்க...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

விலிருந்து ஜீப்பில் அனுராதபுரம் சென்றுகொண்டிருந்தபோது ஜீப் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது

அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கு மரணமானுர். இந்தச் செய்தியை கேள்வியுற்றதும் முல்லைத்தீவு அரச அதிபர் திரு. எஸ். ஞானச்சந்திரன் மயக்கமுற்ருர். அவருக்கு டாக்டர்கள் சிகிச்சையளித்தனர்.

## ஆசிரியர்களுக்கு...

(1ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு இம்மாதச் சம்பளத்தை தனித்தனி காசோலைகளாக வழங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறதாகத் தெரிவிக்கப்பட்டது. [மா]

## கிளிநொச்சியில்...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

சோதனையின்போது கைது செய்யப்பட்ட இளைஞர்களின் தாய்மார் பலர் கிளிநொச்சி கச்சேரிக்கு வந்து அரசாங்க அதிபர் திரு. என் ஜெயநாதனிடம் கைதுசெய்யப்பட்ட தமது பிள்ளைகளை விடுவிப்பதற்கு ஆவன செய்யுமாறு கதறி அழுதார்கள். அவர்கள் தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு கேரி மகஜர் ஒன்றையும் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.

ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த ப. நோ. கூ. சங்க ஊழியர் பொ. சிவசுப்பிரமணியம் (22வயது), ஜெ. செல்வராசா (24 வயது), சுந்தரம் (வயது19) திருநகரைச்சேர்ந்த ஐ கணேஷ் கணேசபுரத்தைச் சேர்ந்த கிட்டு பாலகிருஷ்ணன் ஆகிய இளைஞர்கள் உட்பட பலரின் தாய்மார்களும் மனைவியரும் இவ்வாறு அரச அதிபரிடம் முறையிட்டனர்.

இராணுவ சோதனையைத் தொடர்ந்து கிளிநொச்சியில் பல இளைஞர்களைக் காணவில்லை என்று நேற்று அரசாங்க அதிபரிடம் அவர்களின் பெற்ருேர் முறையிட்டுள்ளனர்.

அக்கராயன்குளம் அகதிகள் முகாமைச் சேர்ந்த மாத்தளையைப்பிறப்பிடமாகக்கொண்ட செல்லத்துரை நாகநாதன் உட்பட 10க்கும் மேற்பட்டோரை காணவில்லையென்று புகார் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கும், காணமல் போனவர்களை கண்டுபிடிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் தாய்மாரிடம் தெரிவித்தார்.

நேற்றும் கிளிநொச்சியில் இராணுவத்தினர் பலத்த சோதனைகளை மேற்கொண்டனர். இதனுல் கிளிநொச்சிநகர் எங்கும் ஒரேபதற்றநிலைகாணப்பட்டது. (சூ)

# வீர மரணமடைந்த இந்திரா என்றும் வாழ்வார்

[மட்டக்களப்பு]

''மனிதகுலத்திற்கு உழைப்பவர்கள் வீரமரணம் அடைகிருர்கள். இது அவர்களின் வாழ்வின் மேம்பாடாக அமைகின்றது. வீரமரணம் அடைபவர்களின் ஆத்மாவை எந்தவொரு சக்தியாலும் அழிக்கமுடியாது.''

இவ்வாறு மட்டக்களப்பு நகரமண்டபத்தில் வர்த்தகர்கள் ஒழுங்கு செய்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தியின் நினைவு அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றிய மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் முதல்வர் சுவாமி ஜீவானந்தாஜீ தனது உரையில் குறிப்பிட்டார்.

மாநகரசபை முன்னாள் உறுப்பினர் திரு. அ. அந்தோனிமுத்து தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-: மனிதகுலத்தின் மேன்மைக்காக உழைக்க அடிக்கடி மகான்கள் தோன்றினார்கள். இவர்கள் உண்மை, சத்தியம், நேர்மைக்காக உழைத்தவர்கள்.

இந்த மகான்களில் ஒருவரான யேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார்.

ஆபிரகாம்லிங்கன், மார்ட்டின் லூதர் கிங், மகாத்மா காந்தி, ஜோன் எவ். கென்னடி போன்றவர்கள் மனித குலத்தின் மேம்பாட்டிற்காகத் தங்களை அர்ப்பணித்து உழைத்தார்கள் அவர்களுக்குக்கிடைத்தது வீரமரணம்.

அம்மரணத்தைத்தான் பாரதப் பிரதமர் இந்திராவும் அடைந்துள்ளார், இம்மரணத்தால் அன்னையின் ஆத்மா அழியவில்லை. ஒருபோதும் அழியமாட்டாது.

# "தமிழர் பாதுகாவலர்"

[சாவகச்சேரி]

''தமிழ் மக்களுக்குப் பாதுகாவலராக விளங்கிய பாரதப் பிரதமர் அமரர் இந்திரர காந்தியின் மரணம் தமிழ் மக்களை நிர்க்கதிக்குள்ளாகி விட்டது. அவர் பிரிவால் வாடும் கோடானுகோடி இந்திய மக்களுடன் நாமும் இணைந்து வருந்துகின்றோம்.

இவ்வாறான அனுதாபச் செய்தி ஒன்றினை சாவகச்சேரி நவீன சந்தை வர்த்தகர்கள் சங்கத்தின் செயலாளர் திரு. கா. நவரத்தினம் கொழும்பிலுள்ள இந்திய தூதுவராலயத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

# இந்திரா நினைவாக இரண்டு முத்திரைகள்

[புதுடில்லி]

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் நினைவாக இரண்டு முத்திரைகளை இந்திய அரசுவெளியிடும்.

முதலாவது முத்திரை அவரது 67வது பிறந்த தினமான இம்மாதம் 19ம் திகதியும், மற்றையது வரும் குடியரசு தினத்திலும் வெளியிடப்படுமமன்று இந்திய தகவல் தொடர்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# வவனியாதமிழ் உயர்அதிகாரி 2வருட லீவில் செல்வார்

[வவனியா]

வவனியா மாவட்டத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான தமிழ்பேசும் உயர் அதிகாரி ஒருவர் இருவருட சம்பளத்துடன்கூடியலீவில் செல்லவுள்ளார்.

இந்த அதிகாரிக்கு இருவருட லீவு இருப்பதனால் இந்த அதிகாரி லீவில் செல்லத்திட்டமிட்டுள்ளார்.

வவனியாவில் நாளாந்தம் பலதரப்பட்ட பிரச்னைகள் கிளம்பியுள்ளது. குறிப்பாகக் குடியேற்றத் திட்டங்கள் நடப்பது தெரிந்ததே சிக்கல் நிறைந்த காலகட்டத்தில் வவனியாவிலிருந்து தொழிலாற்ற முடியாதிருப்பதாக இந்த அதிகாரி அபிப்பிராயப்பட்டு லீவில் செல்லவுள்ளார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் லீவில் செல்லும் பட்சத்தில் அப்பதவியினைச் சிங்கள உயர் அதிகாரி ஒருவர் வகிப்பார் எனக் கூறப்படுகின்றது.

# இந்திரா மறைவுக்கு அனுதாபம்

(மாவிட்டபுரம்)

''ஈழத்தமிழ் மக்களுக்காக எவ்வளவோ செய்யக் காத்திருந்த இந்தியப் பிரதமா இந்திரா காந்தி எதிர்பாராத விதத்தில் கொலைசெய்யப்பட்டது எமக்குப் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது ஈடுசெய்யமுடியாத அவரது இழப்பையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு கூறும் அனுதாபத் தீர்மானமொன்று தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் தலைமையகத்தில் சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா தலைமையில்இக்கூட்டம் நடைபெற்றது.

# பால்வண்ணனர் காலமானர்

[சென்னை]

திருவருட் செல்வர் பாவலர் தா.பால்வண்ணனர் அண்மையில் சென்னையில் காலமானர்

அகில இந்திய சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கச் செயலாளராகக் கடந்த 40 ஆண்டுகளாக பணிபுரிந்த இவர் இராமலிங்க வள்ளலாரின் போதனைகளைப் பல நாடுகளுக்குச் சென்று எடுத்துரைத்தார். மலேசியாவில் இவருக்கு ''வள்ளலார் வாரிசு'' பட்டமும் வழங்கப்பட்டது. இலங்கைக்கு 1982 ம் ஆண்டு வருகை தந்து கொழும்பிலும்-யாழ்ப்பாணத்திலும் பல சமயச் சொற் பொழிவுகளை நிகழ்த்தி பாராட்டையும்பெற்றவர் இவர். ''சுத்த சன்மாக்கம்'' மாத இதழின் ஆசிரியரான இவர் 500க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

# தமிழ்த் தினப் போட்டி யாழ். மாவட்டம் முதலிடம்

[கல்வியங்காடு]

கண்டியில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டம் அதிக புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இப்போட்டிகளில் அகில இலங்கை ரீதியான 21 மாவட்டப் பாடசாலைகள் பங்குபற்றின.

யாழ். கன்னியர்மடம் மகாவித்தியாலய மாணவியான செல்வி. எம். நெய்திரா சொல்வதெழுதலில் முதலாம் இடத்தைப் பெற்ருர்.

இதே பாடசாலை மாணவியான செல்வி கே. ஜெயலதா ஆக்கத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ருர்.

# உரும்பராய் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம்காலைரோந்து சுற்றிக்கொண்டிருந்த இராணுவத்தினர், சைக்கிளில் வந்து கொண்டிருந்த இரு இளைஞர்களைத் தடுத்து நிறுத்திய பொழுது ஒரு இளைஞர் தப்பி ஓடிவிட்டதாகவும் மற்றவர் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரும்பராயைச் சேர்ந்த தம்பிராசா சுதா (18 வயது) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலைக்கு அண்மையில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. (மா)


## லக்ஸ்பிறே நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து இறக்குமதியாகும் பால்மா.

நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து தருவிக்கப்பட்டு. எந்தக் கட்டத்திலும் எவர் கையும் படாமல் உங்களை நாடும் லக்ஸ்பிறே அதி நவீன இயந்திர சாதனங்களின் மூலம் அடைக்கப்படுகின்றது

லக்ஸ்பிறே கலப்பற்றதும், சுத்தமானதும் சுகாதாரமானதும் என்பது நிச்சயம்.


நாட்டின் எல்லாப்பாகங்களிலும் விற்கப்படும் லக்ஸ்பிறே எந்த இடத்திலும் ஒரே தரத்தில் உள்ளது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

இது ஒரு பொதுசன ஸ்தாபனம். இதன் பங்குதாரர்கள் இத்தீவின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏக விநியோகஸ்தர்கள்.

S. V. முருகேசு அன் சன்ஸ் 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சிற்றி மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.



நிர்வாக அதிகாரி லங்கா மில்க்ஃபுட்ஸ் (சீ.டபிள்யூ.ஈ) லிமிட்டெட், வெலிசர.

லக்ஸ்பிறே-நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.

ZENITH

**ராணி** (யாழ்ப்பாணம்)
ஜெமினி-சரோஜாதேவி
**பணமா பாசமா**
தினசரி 3 காட்சிகள்

**வின்ஸர்** (யாழ்)
10-30, 2-15, 4-15, 6-30
சிவாஜி-லக்ஷ்மி
**தியாகம்**
16-11 84 முதல்
சிவப்புச்சூரியன்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லே**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30
ரஜனிகாந், ரத்தி, ஜெய்சங்கர்
**முரட்டுக்காளே**

**றீகல்** (யாழ் நகர்)
10-30, 2-15, 4-30 only
George C. Scott.. ...
TAPS
இராணுவவீரர்களின் போர் முறையும், பயிற்சித் திறமையும் உங்களுக்கும் உதவும்.

**ராஜா** (யாழ். நகர்)
Daily 10-30, 2-00, 4-30
6-30
Jim Gelly—Jim Brown
BLACK BELT JONES
(color)
A Super Action Karate Film
சிறந்த கராட்டி படம்)

**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
சிவாஜி, பாரதி, நாகேஷ், மனோகர்
**தங்கச்சுரங்கம்**
ஈஸ்ட்மென் கலர்
(புதிய பிரதி)

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-30, 6-30
விஷ்ணுவர்த்தன்-சந்திரகலா
**அலைகள்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, அன்ட் 6-45
Walt Disneys
THE FOX AND THE HOUND
Techni Color-Cartoon

**மனோகரா** (யாழ்நகர்)
முரளி-குயிலி-Y.விஜயா
கல்லாப் பெட்டி-சிங்காரம்
K. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**
தந்தையின் செல்வாக்கை பயன்படுத்தி ஒரு ஏழைப் பெண்ணின் சர்வகலாசாலை படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் அந்த முற்கோபக்காரனை அவள் திருத்த முனைந்தாளா? மிகுதி வெண்திரையில்.


# இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—30(15-11-1984)
வாரம்—வியாழன்
திதி—ஸப்தமி முன் இரவி 10-21வரை
நக்ஷத்திரம்—பூசம் முற்பகல் 10-11ன் மேல்ஆயிலியம்

மேடம்:- புதிய முயற்சிகளில் ஆர்வம் தோன்றக் கூடும்வியாபாரிகளுக்கு இலாபகரமான தினம் புதிய தொடர்புகள் மூலம் முன்னேற்றம் ஏற்படும்.

இடபம்:- பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள் எதையும் சிறப்பாக சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள் மக்களாலும் மகிழ்ச்சிக்கிட முண்டு.

மிதுனம்:- சிந்தனை புதிர் போடும் சீறிவரும் கோபம் பெரியவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம் தொழில் துறையில் புதிய கவலைகள் தோன்றக் கூடும் தெய்வ நம்பிக்கை பயன் தரும்.

கடகம்:- திடீர் பிரயாணத்திற்கும் இடமுண்டு உடல் நலம் பாதிக்கப்படலாம் சுகாதாரம் வேண்டும் வெளியிடத் தொடர்புகளில்மந்த நிலை தென்படும்.

சிங்கம்:- அற்ப விடயத்திற்கும் ஆத்திரப்படுவீர்கள் நெருங்கிய நண்பர் ஒருவரை பகைத்துக் கொள்ள நேரிடலாம் அடக்கம் வேண்டும்.

கன்னி;- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம் சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு தெய்வ நம்பிக்கை வேண்டும்.

துலாம்:- அன்னை வழி ஆதரவு தாரளமாகக் கிடைக்கும் அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம் பொருள் வரவுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்:- அறவழியில் மனம் செல்லும் தாராளமனப்பான்மையின் மூலமும் பணம் செலவாகும் இளைய பிள்ளையால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு.

தனுசு:- உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர் உற்சாகம் குன்றும் பிரயாணத்தின் போது பொருள் நழுவக் கூடும்சிலருக்கு உஷ்ண ரோகம் சம்பந்தமான ரோகம் ஏற்படலாம்.

மகரம்:- குடும்பவாழ்வில் மனதிற்கு நிம்மதி பிறக்கும் நீண்ட நாள் பூமிப் பிணக்கு சமரசமாக முடிவடையும் காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு.

கும்பம்:- மனப் போராட்டம் அதிகரிக்கும் உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம் இதன் மூலம் கைகலபும் ஏற்படலாம் பொறுமை நன்று

மீனம்:- இதயப் படுதாவில் இன்பத்தின் மினனல பிதா வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் தெய்வ நப்பிக்கை மேலிடும் பொது பணிகளில் நாட்டம் பிறக்கலாம்.

திருமலை
வே.ரவீந்திரன்

# ரூபவாஹினி

மாலை
5-30 A B C உலக விளையாட்டுகள்
6-25 'ரொம் அன்ட் ஜெரி' கார்ட்டூன் சித்திரம் (ஆங்கலம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 'கிரெட் எக்ஸ் பெக்ரேசன்ஸ்'- சார்ள்ஸ் டிக்கென்ஸின் நாவலைத் தழுவிய சித்திரம் (ஆங்கிலம்)
7-45 தகவல் நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 'தத்துவம்' நாடகம் (சிங்களம்)
9-00 'ஜெபர்சன்ஸ்' நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 இசை நிகழ்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு.

# 'ஈழநாடு' வாசகர் வட்டத்தின் இலக்கியப் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 'ஈழநாடு' வாசகர் வட்டத்தினர் தைத்திருநாள் விழாவை முன்னிட்டும், நத்தார் விழாவை முன்னிட்டும் தனித்தனியே பல்வேறு வகைப்பட்ட இலக்கிய போட்டிகளை நடத்த முடிவு செய்துள்ளனர்.

'ஈழநாடு' வாசகர் வட்டச் செயலவைக் கூட்டம் பிரஸ்தாப வட்டத் தலைவர் என். சோதிநாதன் தலைமையில் கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய கலை அரங்கில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மாணவர்களையும் இளைஞர்களையும் யுவதிகளையும் ஊக்குவிக்கும் முகமாக நத்தார் தினத்தை முன்னிட்டு சிறுகதை கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளை நடத்தவும், இதேபோல் தைத்திருநாளை முன்னிட்டும் சிறுகதை, கவிதை, பேச்சுப்போட்டிகளையும் நடத்துவதெனவும் வெற்றியீட்டுவோருக்குப் பணப்பரிசில்களுடன் பொருட்களும் வெற்றிக் கிண்ணங்களும் மற்றும் பரிசில் பொருட்களும் வழங்குவதெனவும் 'ஈழநாடு' வாசகர் வட்ட செயலவைக் கூட்டம் முடிவு செய்தது.

நத்தார் போட்டிகளை ஒழுங்கு செய்ய செயலவையில் இருந்து பின்வருவோர் தெரிவானார்கள். கி றே. சலேஷிபஸ், எட்வேட் மரியதாஸ், ஏ. கே. இராசேந்திரம், ம. பத்மநாதன், சிவானந்தசர்மா.

தைத்திருநாள் போட்டி அமைப்புக்குழுவினராக பின்வருவோர் தெரிவானார்கள்: நாயகம் சிற்றம்பலம், கே. எஸ். வீரசிங்கம், திருநாவுக்கரசு, ஆ. செல்வத்துரை, திருமதி சிவானந்த சர்மா.

# தன்கீழ் வேலைசெய்பவர்களை மதித்த கணக்காளர்

யாரையும் கவர்ந்துவிடும் அமைதியான பேச்சு எவ்வகையான வேலை நெருக்கடியிலும் எல்லோரையும் சமாளிக்கும் திறன், என்னதான் நடந்தாலும் மற்றவர்களின் மீது பாயாததன்மை தனக்குக்கீழ் வேலை செய்பவர்களை மதிக்கும் மனோபாவம்.........

கடந்த பன்னிரண்டு வருடங்களாக அரசாங்க கணக்காளர் சேவையில் கணக்காளராக இருந்து பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற திரு முருகேசு வேலுப்பிள்ளை அவர்களை அறிந்தவர்கள், பழகியவர்கள், பணியாற்றியவர்கள் போன்றோருக்கு மேற்குறிப்பிட்ட தன்மைகள் அவரிடம் இயல்பாகவே அமைந்துள்ளன. என்பதை உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

1946ம் ஆண்டு அரசாங்க சேவையில் சேர்ந்த அவர் அஞ்சல் தொலைத்தொடர்பு திணைக்களத்தில் எழுதுவினைஞராக பணிபுரியத் தொடங்கினார்.

மிக நீண்டகாலமாக அந்தத் திணைக்கலத்திலேயே பணியாற்றிப் பின்னர் 1968ம் ஆண்டு எழுதுவினைஞர் சேவையில் முதலாம் வகுப்புக்கு பதவி உயர்த்தப்பட்டார்.

1972ம் ஆண்டு அரசாங்க கணக்காளர் சேவையில் பரீட்சையில் சித்தி பெற்று கணக்காளராகி சேவையாற்ற ஆரம்பித்தார். என்றால் அவரின் வளர்ச்சி ஏனையவர்களுக்கு ஒரு முன் மாதிரியானதாகும்.

கணக்காளராகி கொழும்பில் பெருந்தெருக்கள் திணைக்களத்திலும், கட்டிடத் திணைக்களத்திலும் செயல்பட்டு பின்னர் வவனியாக் கச்சேரிக்கு இடமாற்றம்பெற்றார்

ஐந்து வருடகாலம் வவனியாக் கச்சேரியில் கடமைபுரிந்த அவர் 20 மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்து ஓய்வூதியக் கிளையின் கணக்காளரானார்.

எந்த ஒரு அலுவலுக்கும் தேடிவரும் பொது மக்களுக்கு எம்மால் இயலக் கூடியளவு உதவி செய்ய வேண்டுமென்று அவர் அடிக்கடி கூறுவார்.

காரைநகரை பிறப்பிடமாகக் கொண்ட திரு முருகேசு வேலுப்பிள்ளை ஊரின்பெருமை சேர்க்கும் பலரில் ஒருவராக திகழுகின்றார் என்றால் அது அவரின் செயல்பாட்டுத்திறன் நல்ல நோக்கம் என்பவற்றால் என்றால் மிகையாகாது

எடபோதும் சந்தனப் பொட்டு சகிதம் சைவப்பிரமுகராக காட்சிதருவதோடு மட்டுமல்லாது உண்மையான ஒருசைவராகவும் அவர் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்.

அரசாங்கசேவையில் இருந்து அவர் ஓய்வுபெற்றாலும் தனது சமயசமூக சேவையில் முழுநேர ஊழியனாக பணியாற்ற தொடங்கியுள்ளார். அவர்பணி தொடர்வதாகுக.

சிதம்பர திருச்செந்திநாதன்

**எம். ஜி. ஆர்.**

(3-ம்பக்க 4ம்கலத்தொடர்ச்சி)

குறிப்பிட்டார்'

நிலையத்தலைவர் திரு.கே. செல்லையா தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் விசேட பிரார்த்தனையும் வழிபாடுகளும் நடைபெற்றது.

உதைபந்தாட்டம்:

# சென் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றிக் கிண்ணத்தைப்பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

'ஏ' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில், சென். பற்றிக்ஸ் கோஷ்டி வெற்றிபெற்றபோதிலும், யாழ்ப்பாணக் கல்லூரிக் கோஷ்டியின் ஆட்டமே சிறப்பாக இருந்தது. இடைவேளையின் போது யாழ்ப்பாணக் கல்லூரியே 1-0 கோல்களால் முன்னணியில் நின்றது.

ஆட்டம் முடிவடைவதற்கு பத்து நிமிடங்கள் இருக்கும் போது சென். பற்றிக்ஸ் முதலாவதுகோலையும், 'பெனல்டி' மூலம் இரண்டாவது கோலையும் போட்டு வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஏ. தேவராசா மத்தியஸ்தம் வகித்தார்.

'பி' பிரிவுப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 3—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு எஸ். எம். மரியநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

'ஸி' பிரிவுப்போட்டியிலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி 5—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிகள் அனைத்திலும் வெற்றிபெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு வெற்றிக் கிண்ணம் பரிசளிக்கப்பட்டது.

இப்போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது (வி)

# வானொலியில் பெருமாள்கோயில்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வாதராஜப் பெருமாள் கோயில் பற்றிய விவரணச் சித்திரம் ஒன்று இம்மாதம் 16-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-15க்கு இலங்கை வானொலியில் 'கோபுர தரிசனம்' என்ற நிகழ்ச்சியல் ஒலிபரப்பாகவிருக்கின்றது. இச்சித்திரத்தை திரு. எஸ். எம் கோபாலரத்தினம் எழுதியிருக்கிறார்.

# உண்மையான சாரணர் யார்? ஆணையாளர் விளக்கம்

[மானிப்பாய்]

''சாரணருக்குரிய சீருடையை அணிந்தால் மட்டுமே ஒருவர் சாரணராகி விட முடியாது- எந்த வேளையிலும் எவருக்கும் எவ்வித உதவி செய்யும் ஆர்வமும் ஆற்றலுமுடையவனே உண்மையான சாரணன்ஆவான். ''தயாராயிரு'' என்ற குறிக்கோள் வாசகத்தின் பூரணமான அர்த்தத்தை நன்குணர்ந்து சாரணர்கள் மனித சமுதாயத்துக்குச் சேவை செய்தல் வேண்டும்.

வண்ணைவைத்தீஸ்வர வித்தியாலயச் சாரணர் குழுவினர் கொண்டாடிய நட்புறவு விழாவில் பேசிய மாவட்ட ஆணையாளர் திரு. செ .வரதலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழாவில் உதவி மாவட்ட ஆணையாளர்களான திரு .ரோறஸ் இராசசிங்கம், திரு . ஏகாம்பரநாதன், திரு . நவரத்தினம் ஆகியோரும் வித்தியாலய உதவி அதிபர் திரு . எஸ் . எம். இராமலிங்கமும் சொற்பொழிவாற்றினர்.

இவ் விழாவையொட்டிக் கலட்டி அம்மன் கோவிலில் சரணர் குழுவினர் சிரமதானம் செய்தனர். மில்க்வைற் அதிபர் திரு .க .சனகராசா மண்வெட்டிகளை உதவியும் குளிர்பானம்' அறநூல்கள் போன்றவற்றை அன்பளிப்புச் செய்தும் உற்சாகப்படுத்தினார்.

நட்புறவு விழாவை நடத்தி முடித்த வித்தியாலய சாரணாசிரியர் திரு. இ. விஸ்வலிங்கம் அனைவரின் பாராட்டுகளையும் பெற்றார்.

# யாருடையது?

கரவெட்டியைச் சேர்ந்த திரு. இராசநயகம் ஜுட் அமல்ராஜ் என்பவரதும், திரு. வேதநாயகம் பெனடிக்ற் தேவநாயகத்தினதும் அடையாளஅட்டைகளை திரு எம். யோ குருநாதன் என்பவர் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## பஸ்வசதி வேண்டும் என்று கோரி மாணவர் நடத்திய ஆர்ப்பாட்டம்!

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் உள்ள வ.பி. போக்குவரத்துச் சபை அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை சுமார் 100 பாடசாலை மாணவர்கள் தங்களுக்கு பஸ் வசதி செய்து தரப்படவேண்டுமென ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பலாலி யாழ்ப்பாணம் (764 இலக்க) பஸ் சேவையில் ஆண்களுக்கான பாடசாலை சேவை பஸ் விடப்படவேண்டுமென்பதே மாணவர்களின் கோரிக்கையாகும்.

நேற்றும், நேற்று முன்தினமும் இச்சேவை நடைபெறவில்லை என்பதைக் குறிப்பிட்ட மாணவர்கள், வருட இறுதிப் பரீட்சைக்கான வகுப்புகளுக்குச் செல்வதற்கு பஸ் சேவை இல்லாததால் தமக்கு ஏற்பட்டுள்ள கஷ்டநிலைமை குறித்து எடுத்துக் கூறினர்.

மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பஸ் டிப்போ அதிகாரிகள், பஸ் சேவை நடைபெற ஒழுங்கு செய்வதாக உறுதி அளித்ததைத் தொடர்ந்து மாணவர்கள் பாடசாலைக்கு அமைதியாகச் சென்றுர்கள். (மா)

## விபத்தில் இளைஞர் பலி!

[சாவகச்சேரி]

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கருகில் ஒழுங்கை ஒன்றில் லொறியொன்று பின்பக்கமாகத் திரும்புகையில் பின்னால் வந்த மோட்டார்சைக்கிளுடன் ஏற்பட்ட மோதலில் சின்னத்தம்பி விக்னேஸ்வரன் என்ற 25 வயது இளைஞர் மரணமானர்.

மோட்டார்சைக்கிளை ஓட்டி வந்த இவர்மீது லொறி ஏறியதனுல் அவர் ஸ்தலத்திலேயே மரணமானதாகக் கூறப்படுகின்றது.

மரணமானவரின் சடலம் விசாரணைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

## ஒய்வூதியத் திகதிகள்

(யாழ்ப்பாணம்)

தபால் அலுவலகங்களில் ஒய்வூதியம் பெற்றுவந்தவர்களுக்கு பின்வரும் திகதிகளில் குறிப்பிடப்படும் இடங்களில் உள்ளவர்களுக்கு குருநகரிலுள்ளமக்கள் வங்கிக்கட்டிடத்தின் ஒருபகுதியில் தபால் அலுவலகத்திணைக்களத்தினுல் வழங்கப்படவுள்ளது.

19ம் திகதி: சாவகச்சேரி, தெல்லிப்பழை, பருத்தித்துறை.

20ம் திகதி: சுன்னுகம், வல்வெட்டித்துறை, கரவெட்டி.

21ம் திகதி: யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, வண்ணுர்பண்ணை, சங்கானை,

22ம் திகதி: யாழ்ப்பாணம், கொக்குவில், கோப்பாய், அச்சுவேலி, காரைநகர்

23ம் திகதி; வட்டுக்கோட்டை, சுழிபுரம், அளவெட்டி, புங்குடுதீவு, வசாவிளான், நயினுதீவு, அனலைதீவு.

26ம் திகதி: பண்டத்தரிப்பு, வேலனை, நெடுந்தீவு, கொடிகாமம், மானிப்பாய், கைதடி, உரும்பராய் (மா)

## சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலக வான் கடத்தப்பட்டது! சுகாதாரசேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இணுவிலிலுள்ள தாய்—சேய் நலவைத்திய நிலையத்துக்குப் பெறுமதியான மருந்து வகைகளையும், திரிபோஷாமாபைக்கட்டுக்களையும் கொண்டு சென்ற 'வோக்ஸ் வகன்' வான் நேற்றுக் காலை இனந்தெரியாத இரு நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு இந்த வான் சொந்தமானது.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் கீழ் உள்ள பகுதியில் வாழும் ஒன்றரைலட்சம் மக்களின் சுகாதார சேவையும், தொண்டர்கள். ஊழியர்களுக்கு வழங்கும் பயிற்சியும் இந்தவான் கடத்தப்பட்டதால் பாதிப்படைந்துள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரம் கவலை தெரிவித்துள்ளார்.

கடத்திச் செல்லப்பட்டவர்கள், இதனுல்பொதுமக்களுக்கு ஏற்படும் சுகாதாரப் பாதிப்பை உணர்ந்து பொறுப்புணர்ச்சியுடன் உடனடியாக கடத்தப்பட்ட வானை ஒப்படைக்கும்படி சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (பா)

## சங்கத்தில் கொள்ளை!

(கிளிநொச்சி)

கரடிப்போக்குச் சந்தியிலிருக்கும் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மூவாயிரம் ரூபா ஆயுதந் தாங்கிய நபர்களினுல் கொள்ளையடிக்கப்பட்டது.

## இந்திராவுக்கு நேரு விருது

[புதுடில்லி]

சர்வதேச பரிவுணர்வுக்கான ஜவஹர்லால் நேரு விருது மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான இந்த விருதுபற்றி நேற்று அறிவிக்கப்பட்டது. தந்தையின் நினைவாக வழங்கப்படும் சர்வதேச விருது ஒன்று மகளுக்குக் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## கல்வித் திணைக்கள ஊழியர் ஒரு மணிநேரம் வெளிநடப்பு

(கல்வியங்காடு)

வடபகுதியில் ஆயுதப்படையினர் அப்பாவிப்பொதுமக்கள் மீதும், அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் மீதும் நடாத்திவரும் தாக்குதல். கொலைச்சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து யாழ். கல்வித்திணைக்களத்தின் சகலதரஊழியர்களும் நேற்றுநண்பகல் ஒரு மணித்தியாலம் வெளிநடப்புச் செய்தனர்.

நண்பகல் 12 மணிதொடக்கம் ஒருமணிவரையும் இந்த வெளிநடப்பு நடைபெற்றது.

சகல ஊழியர்களும் கறுப்புப்பட்டி அணிந்திருக்ககாணப்பட்டனர்.

இந்த நேரம்கல்வித்திணைக்களத்துக்கு அலுவல்கள் நிமித்தம்வந்திருந்த ஆசிரியர்களும் கறுப்புப்பட்டி அணிந்து வெளிநடப்புச்செய்த ஊழியர்களுடன்கலந்து கொண்டிருந்தனர்.

''தமிழ் அரசஊழியர்களுக்கு நிம்மதியில்லை. அரசுக்கோ இதுபற்றி அக்கறையில்லை'' ''இராணுவம் மக்களை பாதுகாக்கவா? அழிக்கவா?'' என்பன போன்ற சுலோகஅட்டைகளும் காணப்பட்டன. (மா)

## நிபந்தனையுடன் விடுதலை

[கல்வியங்காடு]

அரியாலை மேற்குப்பகுதியில் இராணுவம் வீதியில் வைத்து கைது செய்த சின்னத்துரை என்றழைக்கப்படும் குணசேகரன் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டபோதலும் வாரத்துக்கு ஒருமுறை வந்து கையொப்பமிடும்படி கேட்கப்பட்டுள்ளார்.

## சனிக்கிழமை ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திலுள்ள இலங்கைவங்கிக்கிளையில் ஓய்வூதியம்பெற்று வந்தவர்களுக்கு இம்மாதம் 17ம் திகதி சனிக்கிழமை மட்டும் குருநகர் இராணுவமுகாமுக்கு முன்னுல் உள்ள இலங்கைவங்கிக்கிளையில் ஓய்வூதியம்வழங்கப்படவுள்ளது. (மா)

## 8 நாட்களில் தி.மு.க.வேட்பாளர் பட்டியல்

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கான தி. மு. க.வின் வேட்பாளர் பட்டியல் இம்மாதம் 22ம் திகதி வெளியிடப்படும் என்று திரு. மு. கருணுநிதி நேற்றுத் தெரிவித்தார்

## கைதடியில் ரூபா ஒரு லட்சம் கொள்ளை!

(சாவகச்சேரி)

கைதடியிலுள்ள தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் காலை இனந்தெரியாத 4 இளைஞர்கள் துப்பாக்கி முனையில் சுமார் ஒரு லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சைக்கிளில் வந்த நான்கு இளைஞர்கள் ஆயுதங்கள் சகிதம், காரியாலயத்துக்குள் புகுந்து மலசல கூடம் சென்றிருந்த முகாமையாளரை அழைத்து வந்து இரும்புப்பெட்டியைத் திறந்து அங்கிருந்த சுமார் ஒரு லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்தனர்.

பின்னர், சங்கத்தின் கிராமிய வங்கிக்குள் புகுந்து, அங்கிருந்த ஊழியரிடம் ரூபா 2,000ஐயும் கொள்ளையடித்தார்கள்.

இக்கொள்ளைச் சம்பவத்திற்கு முன்னர் காரியாலயத்திலுள்ள ஒரு அறையில் எட்டு ஊழியர்களை வைத்துப் பூட்டினர்.

## மரண அறிவித்தல்

### வ. ஆ. நல்லதம்பி

பிரபல வர்த்தகர் வ. ஆ. நல்லதம்பி அவர்கள் காலமாகிவிட்டார். இவர் வ. ஆ. செல்லப்பா, செல்லையா ஆகியோரின் அன்புச்சகோதரருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 15-11-84 வியாழக்கிழமை காலை 10-30 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிருேம்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

லோட்டஸ் வீதி, வண்ணுர்பண்ணை,
யாழ்ப்பாணம். 744

## றேடியோ கிடைத்தது

[கல்வியங்காடு]

யாழ் கல்விக் கந்தோரில் பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்ட 'றேடியோ இயந்திரம், கந்தோரின் முன்பக்க வாசலில் நண்பகல் நேரம் கிடக்கக் காணப்பட்டது.

றேடியோ இயந்திரம் பொலிஸ் விசாரணையின் பின்னர் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற பாதுகாப்புக்கு புதிய கருவி

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்படவுள்ளது.

உலோகப் பொருட்களுடன் செல்வோரை கண்டுபிடிக்க கட்டுநாயக்கா விமானநிலையத்தில் உள்ளதுபோன்ற கருவி பாராளுமன்றத்தினுள் பொருத்தப்படவுள்ளது.

பிரதமர் திரு ஆர். பிரேமதாசா தெரிவித்த ஆலோசனையைத் தொடர்ந்து இந்தக் கருவியை வாங்க 6 லட்சம் ரூபாவை ஒதுக்குவதென அமைச்சு நேற்று முடிவுசெய்தது.

## இன்று அஞ்சலிக் கூட்டம்

(சுண்டிக்குளி)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தினர் நிலைய மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்திக்கு அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடாத்தவுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி இராமநாதன்

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. இளையதம்பி இராமநாதன் (இளைப்பாறிய பிரதம லிகிதர் யாழ்ப்பாணம் S. H. S கந்தோர்) காலமாகிவிட்டார் இவர் சிவயோகமலரின் அன்புக் கணவரும சுரேந்திரராஜன், சந்திரோதயம், ஈசன் (ஆசிரியர், அனுராதபுரம் த. ம வி), சந்திரவேணி (மாணவி ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார். அன்னுரின் ஈமச்சடங்குகள் புதன்கிழமை (14-11-84) 2 மணிக்கு நடைபெற்றது இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

746

## முல்லைமணிக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''கவிஞர் முல்லைமணிக்கு கிடைத்துள்ள சாகித்திய பண்டலபரிசானது முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மாத்திரமன்றி எமது ஆசிரிய பயிற்சி கல்லூரிக்கே பெருமையளிக்கக் கூடியவிடயமாகும்?'

இவ்வாறு கவிஞர் முல்லைமணியை பாராட்டும் முகமாக கோப்பாய் ஆசிரியப்பயிற்சி கலாசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில் பாராட்டப்பட்டார்,

அதிபர் திரு ஆனந்தகுமாரசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் விரிவுரையாளர் திரு. வை. காசிவப்பிரகாசத்தால் பொன்னடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் 'தமிழுக்கு முல்லைமணி' என்னும் பட்டம் சூட்டப்பட்டு பொற்கிளியும் வழங்கி சிறப்பிக்கப்பட்டார்.

## மரண அறிவித்தல்

### திருமதி. மனேன்மணி பொன்னம்பலம்

திருமதி. மனேன்மணி பொன்னம்பலம் காலமாகிவிட்டார் அன்னுர் இளைப்பாறிய மேல்நீதிமன்ற முதலியார் சு. பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், கதிர்காமநாதன் (உப-அதிபர் யாழ் மத்தியகல்லூரி) திருமதி. இமயவல்லி விக்கினராசா, சிதம்பரநாதன் (யாழ். மாநகரசபை) இராமநாதன் (அதிபர் உயகல்விப்பதிப்பகம்) நல்லைநாதன் (யாழ். மாநகரசபை) லோகநாதன், இலங்கைநாதன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னுரின் பூதவுடல் ஈமக்கிரிகைகளுக்காக இல. 35, செட்டித்தெரு, நல்லூரிலிருந்து 15-11-84 வியாழக்கிழமை பி.ப. 4-00 மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

சு. பொன்னம்பலம்

35, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(747)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் -15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126